# தினபூமி

thinaboomi.com


பூமி: 26 சுற்று: 182 கார்த்திகை 26

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், வெள்ளி, டிசம்பர் 12, 2025

▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தால் உக்ரைனில் விரைவில் தேர்தல்: ட்ரம்புக்கு ஜெலன்ஸ்கி பதிலடி**

....2-ம் பக்கம்

**தேசிய உணர்வை ஒளிரச் செய்தார்: பாரதியாரின் பிறந்தநாளில் பிரதமர் தமிழில் புகழாரம்**

....3-ம் பக்கம்

**டி-20 கிரிக்கெட் போட்டியில் ஹர்திக் 100 விக்கெட்களை எடுத்து புதிய மைல்கல்லை எட்ட வாய்ப்பு**

....6-ம் பக்கம்





தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ‘உடன்பிறப்பே வா’ என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், தாராபுரம் மற்றும் காங்கேயம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது நிர்வாகிகளுக்கு அவர் புத்தகங்களையும் வழங்கினார்.

### 2-ம் கட்ட மகளிர் உரிமைத்தொகை விரிவாக்க திட்டம்:

# சென்னையில் இன்று தொடங்கி வைக்கிறார் முதல்வர் ஸ்டாலின்

## சுமார் 15 லட்சம் பெண்களுக்கு வழங்க நடவடிக்கை

சென்னை, டிச. 12-

தமிழகத்தில் விடுப்பட்ட மகளிருக்கு 2-ம் கட்ட மகளிர் உரிமைத்தொகை ரூ.ஆயிரம் வழங்கும் திட்டத்தை சென்னையில் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இந்த 2-ம் கட்ட விரிவாக்க திட்டத்தில் மொத்தம் 15 லட்சம் பெண்களுக்கு உரிமை தொகை வழங்கப்படவுள்ளது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவகியும், பத்மபூஷன் விருது பெற்றவருமான கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் கலந்து கொள்கிறார்.

**தேர்தல் வாக்குறுதி....**

தமிழகத்தில் 2021-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. தேர்தலுக்கு முன்பாக, தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், தேர்தலில் வெற்றி பெற்று தி.மு.க. ஆட்சி அமைத்த நிலையில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்ட போதும், மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்படாமல் இருந்து வந்தது.

**சட்டசபையில் அறிவிப்பு...**

இந்த நேரத்தில், அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அறிவித்த மகளிர் உரிமைத்தொகை திட்டம் எப்போது வழங்கப்படும் என்று கேள்வி எழுப்பத் தொடங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, கடந்த 2023-ம் ஆண்டு மார்ச் 27-ம் தேதி சட்டசபையில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் தொடங்கப்படுவதாக அறிவித்தார்.

**வங்கிக் கணக்குகளில்**

அதன்படி, 1 கோடியே 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதி அவர்களின் வங்கிக் கணக்குகளிலேயே நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், மேலும் பல பெண்கள், தங்களையும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் இணைக்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலினும் 2-ம் கட்டமாக மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

**28 லட்சம் பெண்கள்....**

அதன்படி, விண்ணப்பிக்கும் பணிகள் தொடங்கின. மொத்தம் 28 லட்சம் பெண்கள், மகளிர் உரிமைத்தொகைக்காக விண்ணப்பித்தனர். அவர்களில் இருந்து தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன்படி சுமார் 15 லட்சம் பேர் 2-ம் கட்ட மகளிர் உரிமைத்தொகைக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**சிறப்பு விருந்தினர்...**

இவர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்கும் தொடக்க விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறுகிறது. விழாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார். இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவகியும், பத்மபூஷன் விருது பெற்றவருமான கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், 2022-ம் ஆண்டு சீனாவின் காங்சோவில் நடைபெற்ற மாற்றுதிறனாளர் ஆசிய விளையாட்டு பூப்பந்து போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியவருமான துளசிமதி முருகேசன் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

> **மேலும் 15 லட்சம் பேருக்கு**
>
> **தமிழ்நாட்டில் ஏற்கனவே 1 கோடியே 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதி அவர்களின் வங்கிக் கணக்குகளிலேயே நேரடியாக வரவு வைக்கப்பட்டு வரும் நிலையில், 2-ம் கட்ட மகளிர் உரிமைத்தொகைக்காக தற்போது விண்ணப்பித்த 28 லட்சம் பேரில் தகுதியானவர்கள் சுமார் 15 லட்சம் பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதம்தோறும் ரூ.1000 வழங்கப்படவுள்ளது.**

# எஸ்.ஐ.ஆர். தொடர்பான வழக்கில் ஜனவரி மாதம் இறுதியில் தீர்ப்பு

## சுப்ரீம் கோர்ட் அறிவிப்பு

புதுடெல்லி, டிச. 12-

**எஸ்.ஐ.ஆர் தொடர்பான வழக்கில் ஜனவரி மாதம் இறுதியில் தீர்ப்பு வழங்கப்படும் என்று சுப்ரீம் கோர்ட் அறிவித்துள்ளது.**

பீகாரில் கடந்த மாதம் சட்டசபை தேர்தல் நடந்த நிலையில், அங்கு முன்னதாக எஸ்.ஐ.ஆர்., பணிகளை தேர்தல் கமிஷன் மேற்கொண்டது. இதற்கு, 'இண்டியா' கூட்டணியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடக்கவுள்ள தமிழகம், கேரளா, மேற்கு வங்கம், உத்தர பிரதேசம் உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எஸ்.ஐ.ஆர்., பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகத்தில் இருந்து தி.மு.க., மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எஸ்.ஐ.ஆர்., பணிகள் நடக்கும் பிற மாநிலங்களில் இருந்தும் ஏராளமான மனுக்களை அரசியல் கட்சியினர், தனி நபர்கள் மற்றும் சமூக அமைப்பினர் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்கள், சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய் மாலா பக்சி அடங்கிய அமர்வு முன் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், எஸ்.ஐ.ஆர். வழக்கில் ஜனவரி இறுதியில் தீர்ப்பு வழங்கப்படும் என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் புதிய மனுக்களை இனி விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப் போவது இல்லை என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

### தமிழ்நாடு உள்ளிட்ட 6 மாநிலங்களில்

# எஸ்.ஐ.ஆர். படிவங்களை திரும்ப வழங்க மேலும் 3 நாட்கள் அவகாசம்

## வரும் 14-ம் தேதி வரை நீட்டித்தது தேர்தல் ஆணையம்

சென்னை, டிச. 12-

**தமிழ்நாடு உள்ளிட்ட 6 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். படிவங்களை திரும்ப வழங்க காலஅவகாசத்தை நீட்டித்து தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.**

பீகார் சட்டசபை தேர்தலை முன்னிட்டு, நடப்பாண்டில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) நடைபெற்றன. அப்போது, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து இருந்தன. எனினும், எஸ்.ஐ.ஆர். பணிகள் நடந்து தேர்தலும் முடிந்து, பீகாரில் என்.டி.ஏ. கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று, ஆட்சியை தக்க வைத்து கொண்டது.

இதேபோன்று, நாடு முழுவதும் எஸ்.ஐ.ஆர். எனப்படும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம் தரப்பு அறிவித்தது. தமிழக சட்டசபைக்கான தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதங்களில் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு தமிழகம் உள்பட 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக நவம்பர் மாத தொடக்கத்தில் இருந்து தமிழகத்தில் வீடு, வீடாக விண்ணப்ப படிவங்களை வாக்கு மைய நிலை அலுவலர்கள் வழங்கினர்.

இந்த விண்ணப்ப படிவங்களை நிரப்பி திருப்பி அளிப்பதற்கான கால அவகாசம் டிசம்பர் 4 என அறிவிக்கப்பட்டு இருந்தது. எனினும், குறுகிய காலத்திற்குள் இந்த பணியை செய்து முடிப்பது என்பது இயலாதது என தமிழக அரசு தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், எஸ்.ஐ.ஆர். நடைமுறைகள் 4-ம் தேதியுடன் முடிவடைய இருந்த சூழலில், கால அவகாசம் ஒரு வாரம் நீட்டிக்கப்பட்டது.

இதன்படி, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை திருப்பி ஒப்படைக்க டிசம்பர் 11 வரை அவகாசம் நீட்டிக்கப்பட்டது. எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கு தமிழகம், கேரளா எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்தது. இதன்பின்னர், டிசம்பர் 16-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். வாக்காளர் இறுதி பட்டியல் பிப்ரவரி 14-ந்தேதி வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தமிழகம் உள்பட 6 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கான படிவங்களை திருப்பி ஒப்படைப்பதற்கான காலஅவகாசம் 3 நாட்கள் நீட்டிக்கப்பட்டு உள்ளது. இதன்படி தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கான படிவங்களை திருப்பி வழங்க டிசம்பர் 14-ம் தேதி வரை காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டு உள்ளது.

இதன்பின்னர் வருகிற 19-ம் தேதி தமிழகம், குஜராத் மாநிலங்களில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். சத்தீஷ்கார், அந்தமான் நிகோபர் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் 18-ந்தேதி வரை படிவங்கள் பெறப்பட்டு, 23-ந்தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். உத்தர பிரதேசத்தில் 26-ந்தேதி வரை படிவங்கள் பெறப்பட்டு 31-ந்தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

### 2026 தமிழக சட்டப்பேரவை தேர்தல்:

# அ.தி.மு.க. சார்பில் போட்டியிட டிசம்பர் 15 முதல் விருப்ப மனு

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, டிச. 12-

**2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அ.தி.மு.க. சார்பில் போட்டியிட வரும் 15-ம் தேதி முதல் விருப்ப மனு வினியோகப்படும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். இந்த விருப்ப மனுக்களை வரும் 15-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை பெற்று பூர்த்தி செய்து கொடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரள மாநில சட்டமன்றப் பொதுத்தேர்தல்களில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்கள் வருகிற 15-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை விருப்ப மனுக்களை பெற்று பூர்த்தி செய்து கொடுக்கலாம் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்; புதுச்சேரி மற்றும் கேரள மாநில சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் விரைவில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற கழக உடன்பிறப்புகள், தலைமைக் கழகத்தில் வருகின்ற 15.12.2025 - திங்கட்கிழமை முதல் 23.12.2025 செவ்வாய்க்கிழமை வரை, தினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரையிலும்; முதல் நாளான 15.12.2025 அன்று நண்பகல் 12 மணி முதல், அதற்கான படிவங்களைப் பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் தெளிவாகப் பூர்த்தி செய்து, மேற்கண்ட காலத்திற்குள் தலைமைக் கழகத்தில் வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இயல்பை விட கூடுதலாக பெய்துள்ளது

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச. 12-

**தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இயல்பை விட கூடுதலாக பெய்துள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த அக்டோபர் மாதம் 16-ந் தேதி தொடங்கியது. தொடங்கிய நாளிலேயே கனமழை பெய்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பொதுவாக வடகிழக்கு பருவமழை என்பது காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயல் சின்னம் போன்றவற்றால் பெய்து வருகிறது.

தமிழகத்தில் வலுவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தென் மாவட்டங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களில் கனமழை பெய்தது. இதற்கிடையே ‘டித்வா’ புயல் உருவாகி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, டெல்டா மாவட்டங்கள், கடலோர மாவட்டங்கள் மற்றும் வட தமிழக மாவட்டங்களில் மழைப்பொழிவை ஏற்படுத்தியது. சில மாவட்டங்களில் கனமழை, வேறு சில மாவட்டங்களில் அதிகனமழை என கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது.

இந்த மழையால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நிர்நிலைகள் நிரம்பின. மேலும் டெல்டா உள்ளிட்ட சில மாவட்டங்களில் பெய்த கனமழையால் பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. இந்த நிலையில், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இயல்பை விட 6 சதவீதம் கூடுதலாக பெய்துள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பருவமழை காலத்தில் இயல்பான நிலையில் 396.9 மிமீ மழை பொழியும் நிலையில், நேற்று வரை 419.3 மிமீ மழை பொழிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் வடகிழக்கு பருவமழை நேற்று வரை இயல்பை விட 2 சதவீதம் குறைவாக பெய்துள்ளது. இயல்பான நிலையில் 731.9 மிமீ மழை பொழியும் நிலையில், நேற்று வரை 715.1 மிமீ மழை மட்டுமே பொழிந்துள்ளது.

# தமிழ்நாடு முழுவதும் 1.50 லட்சம் ஈ.வி.எம். சரிபார்ப்பு பணி துவக்கம்

புதுடெல்லி, டிச. 12-


**தமிழகத்தில் வாக்குப்பதிவுக்காக பயன்படுத்தப்படும் 1.50 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்ப்பு பணி நேற்று முதல் தொடங்கியது.**

தமிழகத்தில் உள்ள 234 சட்டசபை தொகுதிகளுக்கும் அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலையொட்டி, அரசியல் கட்சிகள் எல்லாம் சுறுசுறுப்படைந்துள்ளன. கூட்டணி பேச்சு வார்த்தை எல்லாம் திரைக்கு பின்னால் நடந்து கொண்டிருக்கிறது. இது ஒருபுறம் இருக்க மற்றொரு புறம், தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது. தகுதியான வாக்காளர்களை மட்டும் ஓட்டுப் போடச் செய்யும் நடவடிக்கையாக வாக்காளர்கள் தீவிர சிறப்பு திருத்தப் பணிகள் தமிழகத்தில் நடந்து முடிந்திருக்கிறது.

இந்த நிலையில், வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 16-ம் தேதி வெளியிடப்பட இருக்கிறது. அப்போதுதான் எவ்வளவு வாக்காளர்கள் நீக்கப்பட்டார்கள் என்ற விவரம் தெரியவரும். சுமார் 70 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில், தேர்தலின் போது வாக்குப்பதிவுக்காக பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (ஈ.வி.எம்.) சரிபார்ப்பு பணி நேற்று தொடங்கியது.

வரும் 24-ம் தேதி வரை நடைபெற உள்ள இந்தப் பணிகளின்போது, தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள 1.50 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட உள்ளன. அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெறும் இந்தப் பணிகளை பெல் நிறுவன பொறியாளர்கள் மேற்கொள்ள இருக்கின்றனர்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| ↑ 426.86 | ↑ 140.55 |
| பாயிண்ட் 84,818.13 | பாயிண்ட் 25,898.55 |




**தங்கம்**
1 சவரன் ₹96,400
1 கிராம் ₹12,050



**வெள்ளி**
1 கிலோ ₹209,000
1 கிராம் ₹209.00

**டாலர்** ₹90.25

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தால்


# உக்ரைனில் விரைவில் தேர்தல் நடத்தப்படும்

## அதிபர் ட்ரம்புக்கு ஜெலன்ஸ்கி பதிலடி

**கீவ், டிச. 12-**

உக்ரைனில் தேர்தலை நடத்தாமல் இருக்க போரை நடத்துகிறார் ஜெலன்ஸ்கி என்று அதிபர் ட்ரம்ப் கடுமையாக தாக்கியுள்ள நிலையில், வாக்குப்பதிவுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தால் அடுத்த 2 முதல் 3 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று ஜெலன்ஸ்கி பதிலடி கொடுத்துள்ளார்.

உக்ரைன்-ரஷ்யா இடையேயான போர் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் உக்ரைன் நிலப்பரப்பின் 20 சதவீதத்தை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையேயான போரால் பெரும் அளவு உயிரிழப்புகளும் பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளன. வர்த்தகமும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக, ட்ரம்ப் பதவியேற்ற பிறகு அமைதி பேச்சுக்களை விரைவுபடுத்தி வருகிறார்.



உக்ரைனிடம் கைப்பற்றிய பிரதேசங்களை ரஷ்யா திருப்பித் தர மறுக்கிறது; இதை உக்ரைன் ஏற்க மறுக்கிறது. இதனால் மோதல் தொடர்ந்து நீடிக்கிறது. இதற்கிடையே, உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியின் ஐந்தாண்டு பதவிக்காலம் 2019-லேயே முடிவடைந்தது. ஆனால் ரஷ்ய படையெடுப்பால் உக்ரைனில் போர் சட்டம் அமலில் உள்ளதால் தேர்தல் தடைபட்டுள்ளது. தற்போது, போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா முன்வைத்த அமைதி திட்டத்துக்கு உக்ரைன் அதிபர் சம்மதம் தெரிவிக்கவில்லை.

இது குறித்து ட்ரம்ப் கூறியதாவது, "உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி போர் விவகாரத்தில் எதார்த்தமாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் தேர்தல் நடத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகும்? அவர்கள் ஜனநாயகம் பற்றி பேசுகிறார்கள், ஆனால் அது இனி ஜனநாயகம் இல்லாத நிலைக்கு செல்கிறது," என்றார். மேலும், தேர்தலை காலம் தாழ்த்தவே போரை நீட்டிப்பதாகவும் ட்ரம்ப் விமர்சித்திருந்தார். இதற்கு பதிலடி கொடுத்த ஜெலன்ஸ்கி, "உக்ரைனில் தேர்தல் நடத்த தயாராக உள்ளோம். வாக்குப் பதிவுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தால் அடுத்த 2 முதல் 3 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படும்," என்றார்.

# ஊட்டியில் பழங்குடியின பெண்ணை அடித்துக்கொன்ற புலி பிடிபட்டது

**ஊட்டி, டிச. 12-**

ஊட்டியில் பழங்குடியின பெண்ணை அடித்துக்கொன்ற புலி கூண்டில் பிடிபட்டது.

நீலகிரி மாவட்டம் மசினகுடி அருகே மாவனல்லா பகுதியில் கடந்த மாதம் 24-ந் தேதி பழங்குடியினரான நாகியம்மாள் (வயது 65) என்பவர் மாடு மேய்த்து கொண்டிருந்தபோது, அவரை புலி கடித்து கொன்றது. இதனால் பொதுமக்கள் விடுத்த கோரிக்கையின்படி, கேமராக்கள் பொருத்தி வனத்துறையினர் புலி நடமாட்டத்தை கண்காணித்தனர்.

அப்போது வயதான ஆண் புலி நாகியம்மாளை கடித்து கொன்றது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து இரும்பு கூண்டுகள் வைத்து புலியை பிடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மாவனல்லா அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி பின்புறம் நேற்று முன்தினம் பகலில் வயதான புலி நடமாட்டம் தென்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். தொடர்ந்து வனத்துறையினர் முகாமிட்டு புலியை கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில், ஊட்டி அருகே மாவனல்லா கிராமத்தை சேர்ந்த பழங்குடியின பெண்ணை அடித்துக்கொன்ற டி37 புலி 16 நாட்களுக்கு பிறகு தற்போது சிக்கியுள்ளது. கூண்டில் சிக்கிய 12 வயது மதிக்கத்தக்க ஆண் புலியை, எங்கு விடுவிக்கலாம்? உயிரியல் பூங்காற்கு கொண்டு செல்லலாமா? என வனத்துறை ஆலோசனை நடத்தி வருகிறது.

30-க்கும் மேற்பட்ட இடங்களில் கூண்டுவைத்து ஆட்கொல்லி புலியை வனத்துறையினர் கண்காணித்து வந்த நிலையில், புலி பிடிபட்டுள்ளது. இதனால் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

### டெல்டா பாசனத்திற்காக

# மேட்டூர் அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு

**மேட்டூர், டிச. 12-**

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவானது வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக கடந்த சில மாதங்களாக வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தது. கடந்த சில வாரங்களாக டெல்டா பாசன பகுதிகளில் பெய்த மழை நின்றதால், பாசனத்திற்கான தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு கடந்த 7-ந் தேதி முதல் டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவானது வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில் பாசன பகுதிகளில் தண்ணீர் தேவை மேலும் அதிகரித்துள்ளது. இதனால் நேற்று முன்தினம் காலை முதல் டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவானது வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 459 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவைவிட அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளதால் மேட்டூர் அணை நீர்மட்டம் மீண்டும் குறைய வாய்ப்புள்ளது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி அணை நீர்மட்டம் 116.22 அடியாக இருந்தது.

# தி.மு.க.வில் இணைந்தது ஏன்? பி.டி.செல்வகுமார் விளக்கம்

**சென்னை, டிச. 12-**

நடிகரும், தவெக தலைவருமான விஜய்க்கு 27 ஆண்டுகளாக மேலாளராக பணியாற்றியவர் பி.டி.செல்வக்குமார். கலப்பை மக்கள் இயக்க தலைவராகவும் இருக்கக் கூடிய பி.டி.செல்வக்குமார் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தி.மு.க.வில் இணைந்தார்.



அதன்பின்னர் பி.டி.செல்வக்குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

விஜய் ஒரு நடிகராக சிறப்பாக பணியாற்றியதால் அவருடன் பயணித்தேன். தவெகவில் விஜய்யின் தந்தையவே ஏற்றுக்கொள்ள முடியவில்லை, விஜய்யுடன் ஆரம்ப காலத்தில் இருந்து தியாகம் செய்தவர்கள் யாரும் இப்போது அவருடன் இல்லை. விஜய் மக்கள் இயக்கத்துக்கு தூணாக செயல்பட்டேன்; விஜயின் கட்சிக்கு புதிதாக வந்தவர்களால் எங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தவெகவில் விஜய் ரசிகர் மன்றத்தினருக்கு முக்கியத்துவம் இல்லை. தி.மு.க.வின் கட்டமைப்பு என்னை ஈர்த்ததால் அக்கட்சியில் சேர்ந்தேன்; நான் உருவாக்கிய கலப்பை மக்கள் இயக்கத்தை தி.மு.க.வில் இணைத்துவிட்டேன்.

நிலவு ஒருநாள் அமாவாசையாகும்... நட்சத்திரம் 15 நாட்களுக்குள் இல்லாமல் போகும்.. அதுபோல அவரும் ஒரு நாள்... எனக்கு போஸ்டர் ஒட்டியவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்றார். நிர்மல் குமார், ஆனந்த், ஆதவ் எல்லாம் எப்போது ரசிகர் மன்றத்தில் இருந்தார்கள். மக்களையும், ரசிகர்களையும் விஜய் சரியாக வழிநடத்த வேண்டும். மக்களுக்கு முறையாக விஜய் சேவை செய்வாரா என தெரியவில்லை. ஆனால் எனக்கு மக்கள் பணி செய்யவேண்டும். என் உயிர் உள்ளவரை மக்களுக்கு சேவை செய்வேன். விஜய்யை பார்க்க கூட்டம் வரும், ஆனால் அவருக்கு வாக்களிப்பார்கள் என்று கனவில் கூட நினைக்க கூடாது. இவ்வாறு அவர் கூறினார். தி.மு.க.வில் இணைந்த கலப்பை மக்கள் இயக்க நிர்வாகிகள் விவரம்:-

கன்னியாகுமரி மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் டி.பாலகிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் தோப்பூர் வி.அனிதா, மாவட்ட பொருளாளர் விஸ்வை கே.சந்திரன், கலப்பை மக்கள் இயக்க கௌரவ ஆலோசகர் விஜயன், மாநில துணைத் தலைவர் நந்தகுமார், மாநிலச் செயலாளர் எம்.ராஜ்குமார், மாநில இளைஞர் அணிச் செயலாளர் ஜே.ரவிமுருகன், மாநிலப் பொறுப்பாளர் நாகர்கோவில் டி.பாலகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணித் த்லைவர் ஜி.சுபின்ஆனந்த், மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் வி.செல்வன்.

அகஸ்தீஸ்வரம் ஒன்றியத் தலைவர் எஸ்.ஏசுதாசன், ஒன்றியச் செயலாளர் டி.ஜெகன், மாவட்ட ஐடி விங் பொறுப்பாளர் ஜி.செந்தில், மாநில மருத்துவ அணி தலைவர் டாக்டர் கௌதம், சமூக சேவகர் சொர்ணப்பன், திரைப்படத் தயாரிப்பாளர் - இயக்குநர் விஷ்ணுஹாசன், நடிகர் விஜயபாலாஜி, மகளிர் அணி பொறுப்பாளர் லெட்சுமி உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

# இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த பாக்., படகு பறிமுதல் - 11 பேர் கைது


**புதுடெல்லி, டிச. 12-**

இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திற்குள் நுழைந்த பாகிஸ்தான் மீனவ படகு பறிமுதல் செய்யப்பட்டு, 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்திய கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்த படகு ஒன்றை கடலோர காவல் படையினர் தடுத்து நிறுத்தி பறிமுதல் செய்தனர். அந்த படகில் மொத்தம் 11 பேர் இருந்த நிலையில், அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, குஜராத் ஜாகவ் கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குஜராத் பாதுகாப்பு பி.ஆர்.ஓ. விங் கமாண்டர் அபிஷேக் குமார் திவாரி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திற்குள் நுழைந்த பாகிஸ்தான் மீனவ படகு பறிமுதல் செய்யப்பட்டு 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் கடலோர காவல்படையின் தொடர்ச்சியான கடல்சார் நடவடிக்கைகளையும், இந்தியாவின் கடல்சார் மண்டலங்களுக்குள் சர்வதேச சட்டங்களை உறுதியாக அமல்படுத்துவதன் மூலம் தனது எல்லைகளை பாதுகாப்பதில் இந்தியாவின் அர்ப்பணிப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்தியாவின் கடல்சார் பகுதி முழுவதும் தொடர்ச்சியான கண்காணிப்பை உறுதி செய்வது நமது தேசிய கடல்சார் பாதுகாப்பின் முக்கிய அம்சமாக திகழ்கிறது என்று பதிவிட்டுள்ளார்.



**12-12-2025**

## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எதிர்பார்த்த இடங்களிலிருந்து பணவரவு தாமதப்படும். செயல்திறன் குறைந்தால் கெட்ட பெயர் ஏற்படும். பொருள் இழப்பு ஏற்படலாம். எச்சரிக்கை தேவை.

**ரிஷபம்:-** தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். சுகக் குறைவு ஏற்படலாம். தொழிலில் கொடுக்கல் வாங்கல் சிறப்பாக அமையும்.

**மிதுனம்:-** பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்கள் மூலம் சந்தோஷம் நிலவும்.

**கடகம்:-** தைரியக் குறைவால் மனதில் தெம்பு, தெளிவும் மறைந்து வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும். அதன் காரணமாக காரியத்தடைகள், தோல்விகளும் கதவைத் தட்டும்.

**சிம்மம்:-** புத்திசாலித்தனம் அதிகரிக்கும். இனிய பேச்சுக்களால் கூடுதல் வருமானங்கள் ஏற்படலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான பண வரவு ஏற்படும். சந்தோஷம் நிலவும்.

**கன்னி:-** மனதில் ஒரு நிம்மதி அற்ற நிலை இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். கற்பனை வளமும் பெருகும். எதிர்பார்த்த வரவுகள் வராது ஏமாற்றம் தரும்.

**துலாம்:-** பெண்களால் இலாபம் ஏற்படும். ஆரோக்கிய நிலை மேம்படும். பிரிந்தவர் கூடி மகிழ்வர். மாணவர்கள் புதிய கல்லூரிகளில் சேர்ந்து புதிய முயற்சிகளில் ஈடுபடுவர்.

**விருச்சிகம்:-** திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். மாணவர்கள் தங்கள் கல்வியில் சிறப்பு அடைவர். வீடு, நிலம் ஆகியவற்றில் ஆதாயம் கிடைக்கும். பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு:-** செயல்பாடுகள் அனைத்திலும் ஜெயம் உண்டாகும். எதிர்பார்த்த அரசு உதவிகள் மற்றும் வங்கிக் கடன்கள் எளிதில் கிடைக்கும். தன்னம்பிக்கை, தைரியம் அதிகரிக்கும்.

**மகரம்:-** தெய்வத்தை வணங்குங்கள் தேவைகள் நிறைவேறும். வீண் சிந்தனைகளை அதிகரிப்பதன் காரணமாக வெற்றிகள் தடைப்படலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே கருத்து மோதல்கள் ஏற்படலாம்.

**கும்பம்:-** சந்தோஷ அனுபவங்கள் கூடும். குழந்தைகளின் திறமை கண்டு மகிழ்வார்கள். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். தீர்த்த யாத்திரைகள் திருப்தி தரும்.

**மீனம்:-** இனிமை மிக்க பேச்சு சாதுர்யத்தால் எல்லோரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தொட்டதெல்லாம் பொன்னாகும். மனைவி மூலம் நன்மை பல உண்டாகும்.

# செங்கோட்டையன் - நாஞ்சில் சம்பத் சந்திப்பு

**சென்னை, டிச. 12-**

சென்னையில் த.வெ.க.மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் செங்கோட்டையன் - நாஞ்சில் சம்பத் சந்தித்து பேசி கொண்டனர்.



சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் த.வெ.க. தலைவர் விஜய் பல்வேறு வியூகங்களை அமைத்து பணியாற்றி வருகிறார். கட்சியில் உறுப்பினர் சேர்க்கை ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தாலும், மறுபக்கம் மக்கள் சந்திப்பு, அரசியல் நகர்வுகளில் விஜய்யும், கட்சியின் மாநில நிர்வாகிகளும் தீவிரமாக செயலாற்றுகின்றனர்.

தேர்தல் நெருங்கிவரும் சூழலில், கட்சியை வலுப்படுத்தும் நோக்கிலும், தேர்தல் களப் பணிகளை சீரிய முறையில் முன்னெடுக்கும் வகையில் கட்சி ரீதியாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேர்தல், கட்சி தொடர்பான பணிகளை முடுக்கிவிடும் விதமாக முக்கிய நிர்வாகிகள் கூடி ஆலோசித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை அவ்வப்போது செய்கின்றனர்.

அந்த வகையில், நேற்று த.வெ.க. மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்களின் ஆலோசனைக் கூட்டம் சென்னை தலைமை நிலைய செயலகத்தில் நடைபெற்று வருகிறது. கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த், சமீபத்தில் கட்சியில் இணைந்த த.வெ.க. நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், நாஞ்சில் சம்பத் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர். தேர்தல் கூட்டணி, கட்சியின் அடுத்தகட்ட நகர்வு குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

முன்னதாக சமீபத்தில் தவெகவில் இணைந்த செங்கோட்டையன், நாஞ்சில் சம்பத் இருவரும் சந்தித்து பேசினர். அப்போது ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டனர். இருவரும் அதிமுகவில் நிர்வாகிகளாக இருந்தது குறிப்பிடத்தக்கது. பின்னர் செய்தியாளர்களிடம் நாஞ்சில் சம்பத் கூறுகையில், "விமர்சனங்களால் வளர்ந்தவன்.. கனவுகளோடு களத்துக்கு வருகிறேன்" என்று கூறினார்.

# காசா அமைதி திட்டத்திற்கு ஆதரவை அளித்த இந்தியா

## பிரதமர் மோடி அலுவலகம் அறிக்கை

**புதுடெல்லி, டிச. 12-**

காசா மீது இஸ்ரேல் தொடுத்து வரும் போரால் 69 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். அமைதி பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டபோதும், போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஹமாஸ் அமைப்பினர் ஈடுபடுகின்றனர் என கூறி இஸ்ரேல் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில், பிரதமர் மோடியை, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தொலைபேசி வழியே நேற்று தொடர்பு கொண்டு பேசினார். அப்போது இரு நாடுகளுக்குஇடையேயானமூலோபாய உறவை இன்னும் வலுப்படுத்துவதற்கான வழிகளை பற்றி இருவரும் ஆலோசித்தனர். மேற்காசியாவின் சூழல் பற்றிய பார்வைகளை பிரதமர் மோடியுடன் நெதன்யாகு பகிர்ந்து கொண்டார்.

இதுபற்றி பிரதமர் மோடியின் அலுவலகம் வெளியிட்ட செய்தியில், காசா அமைதி திட்டத்தினை விரைந்து அமல்படுத்துவது உள்ளிட்ட அந்த பகுதியில் நீடித்த அமைதி ஏற்படுவதற்கான முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவை பிரதமர் மீண்டும் உறுதிப்படுத்தினார் என தெரிவித்து உள்ளது.


இரு தலைவர்களும், பயங்கரவாதத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்து கொண்டதுடன், அனைத்து வடிவிலான பயங்கரவாதத்திற்கும் பூஜ்ய சகிப்பு தன்மையை கொண்டிருக்கிறோம் என மீண்டும் வலியுறுத்தினர். இருவரும் தொடர்ந்து தொடர்பில் இருப்பது என ஒப்பு கொண்டனர் என்றும் அந்த செய்தி தெரிவிக்கின்றது.

# அமெரிக்க குடியுரிமை பெற புதிய கோல்டு கார்டு திட்டம்

## அதிபர் ட்ரம்ப் துவக்கி வைத்தார்

**வாஷிங்டன், டிச. 12-**

குறைந்தபட்சம் 10 லட்சம் அமெரிக்க டாலர் கட்டணம் செலுத்தி விரைவாக விசா பெருவதற்கான கோல்டு கார்டு திட்டத்தை அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொடங்கிவைத்தார்.



அமெரிக்காவில் வெளிநாட்டவர்கள் குடியேறுவதைக் கட்டுப்படுத்தவும், குடியுரிமை பெறுவதைக் கட்டுப்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை அதிபர் ட்ரம்ப் எடுத்து வருகிறார். இதனால், அமெரிக்காவில் வசித்து வந்த இந்தியர்கள் உட்பட பல வெளிநாட்டினர் நாடு கடத்தப்பட்டனர். பல அமெரிக்க நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களும் வெளியேற வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டனர்.

இந்நிலையில், இதற்கு தீர்வு காண வேண்டும் என பல்வேறு நிறுவனங்கள் அமெரிக்க அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தன. இதையடுத்து, இத்தகையவர்களுக்காக கோல்டு கார்டு திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என ட்ரம்ப் கூறி இருந்தார்.

அதன்படி, கோல்டு கார்டு திட்டத்தை புதன் கிழமை ட்ரம்ப் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் விசா பெற விரும்புபவர்கள் அதற்கான இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

இரண்டு வகையான விசா கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த கட்டணங்கள் மிக மிக அதிகம் என்பதால் இதற்கு விண்ணபிப்பவர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனி நபர்கள் விசாவுக்காக விண்ணப்பிப்பதாக இருந்தால் அவர்கள் சேவைக் கட்டணமாக 15,000 டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ. 13 லட்சம்) செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

இதையடுத்து, விண்ணப்பிக்கும் நபர் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும். மேலும், விண்ணப்பதாரரிடம் நேர்காணலும் நடத்தப்படும்.

விண்ணப்பம் ஏற்கப்படுமானால் அதன் பின்னர் விண்ணப்பதாரர் 10 லட்சம் டாலர் கட்டணம் (இந்திய மதிப்பில் சுமார் ரூ. 9 கோடி) செலுத்த வேண்டும்.

கட்டணம் செலுத்தப்பட்ட பிறகு சில வாரங்களில் ஈ.பி.1 அல்லது ஈ.பி. 2 விசா வழங்கப்படும். இந்த விசாவைப் பெறவதன் மூலம் ஒருவர் சட்டப்பூர்வ நிரந்தர குடியுரிமையைப் பெற முடியும்.

தாங்கள் விரும்பும் பணியாளர்கள் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேற நிறுவனங்களும் விண்ணப்பிக்க முடியும். நிறுவனங்கள் எனில் அதற்கான விசா கட்டணம் 20 லட்சம் டாலராகும். கோல்டு கார்டு திட்டத்தை தொடங்கிவைத்துப் பேசிய அதிபர் ட்ரம்ப், எனக்கும் நாட்டுக்கும் மிகவும் உற்சாகமான விஷயம் இது. ட்ரம்ப் கோல்டு கார்டு திட்டத்தை தொடங்கி உள்ளோம் என தெரிவித்துள்ளார்.

### ராணுவம், கல்வி தொடர்பாக

# பாக்.,-இந்தோனேசியா இடையே ஏழு ஒப்பந்தங்கள் கையெழுத்து

**இஸ்லாமாபாத், டிச. 12-**

ராணுவம், பொருளாதாரம் மற்றும் கல்வி தொடர்பாக பாகிஸ்தான்-இந்தோனேசியா இடையே 7 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

இந்தோனேசியா அதிபர் பிரபாவோ சுபியாண்டோ அரசுமுறை பயணமாக பாகிஸ்தான் சென்றார். 2019-ம் ஆண்டுக்கு பிறகு இந்தோனேசியா அதிபர் ஒருவர் பாகிஸ்தான் செல்வது இதுவே முதல்முறையாகும். இஸ்லாமாபாத் சென்ற அவருக்கு ராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் இருநாடுகளுக்கு இடையே ராணுவம், பொருளாதாரம் மற்றும் கல்வி தொடர்பாக 7 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

பாகிஸ்தான் நாட்டின் மாணவர்கள் கல்வி உதவித் தொகையில் இந்தோனேசியா சென்று பட்டப்படிப்பு படிப்பது போன்றவை இதில் அடங்கும். மேலும் இந்தோனேசியாவை மருத்துவ அரங்கில் உயர்த்துவதற்காக பாகிஸ்தானை சேர்ந்த டாக்டர்கள் குழுவினர் அங்கு சென்று அவர்களுக்கு தொழில்முறை பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

### சீனாவில் தீ விபத்து; 12 பேர் உயிரிழப்பு

**குவாங்சவ், டிச. 12-**

சீனாவின் தெற்கே குவாங்டங் மாகாணத்தில் சாவோனன் மாவட்டத்தின் சாந்தவ் நகரில் உள்ள குடியிருப்பு கட்டிடம் ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதில், தீ மளமளவென பரவியது. 150 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பகுதிகளுக்கு தீ பரவியது. இதில் சிக்கி 12 பேர் பலியானார்கள்.

40 நிமிடங்களுக்கு பின்னர் போராடி தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த தீ விபத்திற்கான காரணம் பற்றி தெரியவில்லை. அது பற்றி விசாரணை நடந்து வருகிறது.

சீனாவுக்கு உட்பட்ட ஹாங்காங் நகரில் வரலாறு காணாத அளவுக்கு எற்பட்ட தீ விபத்தில் சிக்கி 140-க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். 75 ஆண்டுகளில் இல்லாத அழிவை அந்நகரம் சந்தித்து இருந்தது.

### கூட்டணி விவகாரத்தில் விஜய்க்கு முழு அதிகாரம்:
# த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நான்கு தீர்மானங்கள்

சென்னை, டிச. 12-

த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது. அதில் கூட்டணி விவகாரத்தில் முடிவெடுக்க விஜய்க்கு முழு அதிகாரம் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



சென்னை பனையூரில் த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் த.வெ.க. மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த ஆலோசனை கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்கவில்லை.

தீர்மானம் 1:

தி.மு.க. ஆட்சியை அகற்றி, புதியதோர் தமிழகத்தை சிறப்புற உருவாக்க வேண்டும். அதற்காக நமது வெற்றித் தலைவர் விஜய் அவர்களை முதல்வராக ஏற்றுக் கொண்டு, அவரின் தலைமை விரும்பி வருவோரை கூட்டணிக்கு அரவணைப்போம். மேலும் நமது கூட்டணி குறித்த அனைத்து இறுதி முடிவுகளையும் எடுக்க, தலைவர் அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் 2:

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் "தேர்தல் கூட்டணி பேச்சுவார்த்தை சிறப்புக் குழு" அமைக்கப்படுகிறது. இந்த தேர்தல் கூட்டணி பேச்சுவார்த்தை குழுவுக்கான பல்வேறு கடமைகள் குறித்தும் நமது வெற்றித் தலைவர் அவர்களே முடிவெடுக்க தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் 3:

இருண்டு கிடக்கும் தமிழகத்தை மீட்க, நம் தமிழக மக்களைக் காக்க, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் "தேர்தல் வாக்குறுதிகள் உருவாக்கும் சிறப்புக் குழு" அமைக்கப்படுகிறது. இந்த குழுவுக்கான பல்வேறு கடமைகள் குறித்தும் நமது வெற்றித் தலைவர் அவர்களே முடிவெடுக்க தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் 4:

அவதூறு பரப்பும் எதிரிகளின் அறைகூவல் பொய்யுரைகளை தோலுரித்து, எதிரிகளை எதிர்கொண்டு தோற்கடிக்க, ஒரு வலிமையான பரப்புரையை முன்னெடுக்க தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது நல்ல விசயம். ஒரு நல்ல விசயத்திற்காக கொடுக்கப்பட்ட பாமக சார்பில் கொடுக்கப்பட்ட கடிதத்தை தமிழக வெற்றிக்கழகம் பெற்றுக் கொண்டுள்ளது.

நிச்சயம் கட்சித் தலைவரிடம் இது குறித்து ஆலோசித்து ஆர்பாட்டத்தில் கலந்து கொள்வது குறித்து தெரிவிக்கப்படும் என்றார்.

### தேசிய உணர்வை ஒளிரச்செய்தார்:
# பாரதியாரின் பிறந்தநாளில் பிரதமர் தமிழில் புகழாரம்

புதுடெல்லி, டிச. 12-

இந்தியாவின் கலாச்சார, தேசிய உணர்வை அவர் ஒளிரச் செய்தார் என்றும், தமிழ் இலக்கியத்தை செழுமைப்படுத்துவதில் பாரதியார் ஆற்றிய பங்களிப்புகள் ஒப்பிலாதவை என்று பிரதமர் மோடி அவரின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழில் புகழாரம் சூட்டியுள்ளார்.

கவிஞர், எழுத்தாளர், விடுதலை போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி என பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மகாகவி பாரதியாரின் 143-வது பிறந்தநாள் நேற்று (டிசம்பர் 11-ம் தேதி) கொண்டாடப்பட்டது.

இந்நிலையில் பிரதமர் மோடி தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- மகாகவி சுப்ரமணிய பாரதியின் பிறந்தநாளில் அவருக்கு மரியாதை செலுத்துகிறேன். அவரது கவிதைகள் துணிவைத் தூண்டின, அவரது சிந்தனைகள் எண்ணற்ற மக்களின் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருந்தன.

இந்தியாவின் கலாச்சார, தேசிய உணர்வை அவர் ஒளிரச் செய்தார். நீதியான, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமூகத்தை உருவாக்க அவர் பாடுபட்டார். தமிழ் இலக்கியத்தை செழுமைப்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்களிப்புகளும் ஒப்பிலாதவை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட
# இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் கப்பல் தொடக்கம்

லக்னோ, டிச. 12-

ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் முதல் இந்திய கப்பலை சர்பானந்த சோனோவால் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் கப்பலை மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். தூய்மையான மற்றும் நிலையான உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தை உறுதி செய்வதில் இது ஒரு முக்கியமான மைல்கல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரணாசியில் உள்ள நமோ காட் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், இந்த கப்பலின் வணிகச் செயல்பாடுகளை தொடங்கி வைத்தார். பின்னர் பேசிய அவர், ஹைட்ரஜன் எரிபொருளால் இயங்கும் கப்பல்களை இயக்கும் சீனா, நார்வே, நெதர்லாந்து மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா தற்போது இணைந்துள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

ஹைட்ரஜன் எரிபொருளால் இயங்கும் இந்த கப்பல், இந்தியாவின் தொழில்நுட்பத் திறன்களையும், நிலையான எரிசக்தி மீதான நமது அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்ட அவர், இது வெறும் தொழில்நுட்ப முன்னேற்றம் மட்டுமல்ல, பசுமை ஆற்றல் மற்றும் உள்நாட்டுத் தீர்வுகளை நோக்கி நாம் நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்கிறோம் என்பதற்கான ஒரு அறிகுறி என்று கூறினார்.

# கருணாநிதிக்கு பாரத ரத்னா விருது: மக்களவையில் தி.மு.க. கோரிக்கை

புதுடெல்லி, டிச. 12-

கலைஞர் கருணாநிதிக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என மக்களவையில் தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த டிசம்பர் 1ஆம் தேதி தொடங்கி நடைபெற்று கொண்டிருக்கிறது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து உடனடியாக விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், கூட்டத்தொடரின் முதல் இரண்டு நாட்கள் மக்களவை நடவடிக்கைகள் முற்றிலும் முடங்கின. இதனையடுத்து அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை அவைத் தலைவர் ஓம் பிர்லா அழைத்துப் பேசியதையடுத்து டிசம்பர் 3ஆம் தேதி முதல் மக்களவை மற்றும் மாநிலங்களவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற்று வருகின்றன.

நடப்பு கூட்டத்தொடரின் முக்கிய நிகழ்வாக, 'வந்தே மாதரம்' பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்ததை யொட்டி, மக்களவையில் 8ஆம் தேதி விவாதம் நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி விவாதத்தை தொடங்கி வைக்க, காங்கிரஸ் எம்.பி பிரியங்கா காந்தி, தமிழக எம்பிக்கள் ஆ.ராசா, துரை வைகோ, சு.வெங்கடேசன் உள்ளிட்டோர் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினர். மற்றொரு முக்கிய நிகழ்வாக, எஸ்.ஐ.ஆர் குறித்து மக்களவையில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு விவாதம் நடைபெற்றது.

விவாதத்தை துவக்கி வைத்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, நாட்டின் ஜனநாயகத்தை சிதைக்கும் நோக்கில் தேர்தல் ஆணையத்தை மத்திய பாஜக அரசு கைப்பாவையாக பயன்படுத்தி வருவதாக குற்றம்சாட்டினார். நேற்றைய தினமும் எஸ்.ஐ.ஆர். வந்தே மாதரம் குறித்த விவாதங்கள் மாநிலங்களவையில் நடைபெற்றன.

இந்தநிலையில், தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதிக்கு பாரத ரத்னா விருது என மக்களவையில் தி.மு.க. எம்.பி.க்கள் கோரிக்கை வைத்தனர். இது தொடர்பாக மக்களவையில் தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் பேசியதாவது:- முன்னாள் முதல்-அமைச்சர் கருணாநிதிக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும். இதுவரை தி.மு.க.வை சேர்ந்த யாருக்கும் பாரத ரத்னா விருது வழங்கப்படவில்லை. ஆட்சி நிர்வாகத்தில் பிற இந்திய மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இருந்தவர் கலைஞர் கருணாநிதி என கூறினார்.

### நான் எழுப்பிய எந்த ஒரு பிரச்சினைக்கும்
# அமித்ஷா பதில் அளிக்கவில்லை: ராகுல்காந்தி கடும் குற்றச்சாட்டு

புதுடெல்லி, டிச. 12-

பாராளுமன்ற மக்களவையில் நடைபெற்ற தேர்தல் சீர்திருத்தம் குறித்த விவாதத்தின்போது தான் எழுப்பிய எந்த ஒரு கேள்விக்கும் அமித்ஷா நேரடியாக பதில் அளிக்கவில்லை என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

தேர்தல் சீர்திருத்தம் குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, வாக்கு திருட்டு குறித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை கடுமையாக மறுத்தார். அப்போது இருவருக்கும் இடையே காரசாரமாக விவாதம் நடைபெற்றது.

இந்நிலையில், அந்த சம்பவம் தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, "காரசாரமாக நடந்த அந்த விவாதத்தில் அமித்ஷா தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அவரது கைகள் நடுங்கின. இதையெல்லாம் நீங்களும் பார்த்திருப்பீர்கள். அவர் மனதளவில் அழுத்தத்தில் இருந்தார். அது பாராளுமன்றத்தில் வெளிப்பட்டது. அதை முழு நாடும் பார்த்தது.

நான் கூறிய விஷயங்களுக்கு அவர் பதில் அளிக்கவில்லை, எந்த ஆதாரத்தையும் அவர் கொடுக்கவில்லை. அதுபற்றி நாங்கள் செய்தியாளர் சந்திப்பின்போது பகிரங்கமாகக் கூறினோம்.

எனது செய்தியாளர் சந்திப்புகளை பாராளுமன்றத்தில் விவாதிப்போம் என்று அவருக்கு நேரடியாக சவால் விடுத்தேன். பதில் கிடைக்கவில்லை. உண்மை என்ன என்பது உங்களுக்குத் (பத்திரிகையாளர்களுக்கு) தெரியும்.

அவரது உரை முழுக்க முழுக்க தற்காப்புக்கான ஒரு முயற்சியே அன்றி வேறில்லை. வாக்கு திருட்டு என்பது மிகப் பெரிய தேசதுரோகம். வெளிப்படையான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், தலைமை தேர்தல் ஆணையருக்கு கூடுதல் சட்ட பாதுகாப்பு வழங்குவது என நான் எழுப்பிய எந்த ஒரு பிரச்சினைக்கும் அமித்ஷா பதில் அளிக்கவில்லை" என தெரிவித்தார்.

### கேரளா 2-ம் கட்ட உள்ளாட்சித்தேர்தல்:
# முதல்வர் பினராயி விஜயன் வாக்களித்தார்

திருவனந்தபுரம், டிச. 12-

கேரளா 2-ம் கட்ட உள்ளாட்சி தேர்தலில் முதல்வர் பினராயி விஜயன் வாக்களித்தார்.



கேரள மாநிலத்தில் உள்ளாட்சி தேர்தல் 2 கட்டங்களாக நடத்த முடிவு செய்யப் பட்டது. அதன்படி, திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா, பத்தனம்திட்டா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி ஆகிய 7 மாவட்டங்களில் கடந்த 3 தினங்களுக்கு முன் முதல் கட்ட வாக்குப்பதிவு நடந்தது. இதில் 69.70 சதவீத வாக்குகள் பதிவானது.

இந்தநிலையில் நேற்று (வியாழக்கிழமை) 2-ம் கட்ட வாக்குப்பதிவு திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய 7 மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. மக்கள் அனைவரும் தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர். மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடக்கிறது.

இந்த நிலையில், உள்ளாட்சி தேர்தலையொட்டி கண்ணூர் மாவட்டத்தில் உள்ள பினராயி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் முதல்வர் பினராயி விஜயன் வாக்களித்தார். இந்த தேர்தலில் மொத்தம் 38,994 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இதில் 18,974 ஆண்கள், 20,020 பெண்கள். கிராம ஊராட்சிகளில் 28,274 வேட்பாளர்களும், ஊராட்சி ஒன்றியங்களில் 3,742 வேட்பாளர்களும், மாவட்ட ஊராட்சிகளில் 681 வேட்பாளர்களும், நகராட்சிகளில் 5,546 வேட்பாளர்களும், மாநகராட்சிகளில் 751 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

தேர்தலுக்காக 7 மாவட்டங்களில் மொத்தம் 18,274 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இதில் 2,055 வாக்குச்சாவடிகள் பதற்றம் அதிகம் உள்ள வாக்குச்சாவடிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு 2 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

தேர்தல் பாதுகாப்பு பணியில் 72 ஆயிரம் போலீசார் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

# டிசம்பர் 14 முதல் பா.ம.க.வில் விருப்ப மனுக்கள் விநியோகம்
## அன்புமணி அறிவிப்பு

சென்னை, டிச. 12-



வருகிற 14-ம் தேதி முதல் பா.ம.க.வில் விருப்ப மனுவை தாக்கல் செய்யலாம் என்று அன்புமணி தெரிவித்தார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல்கள் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற உள்ளன. இந்தத் தேர்தல்களில் தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் உள்ள தொகுதிகளில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட விரும்புவோரிடமிருந்து வரும் 14.12.2025 ஞாயிற்றுக் கிழமை முதல் 20.12.2025 சனிக்கிழமை வரை ஒரு வாரத்திற்கு விருப்ப மனுக்கள் பெறப்படும்.

சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலை பனையூரில் உள்ள கட்சித் தலைவர் அலுவலகத்தில் மேற்குறிப்பிடப்பட்ட நாள்களில் தினமும் காலை 11 மணி முதல் மாலை 6 மணி வரை விருப்ப மனுக்கள் பெறப்படும். போட்டியிட விருப்பம் தெரிவிப்பதற்கான விண்ணப்பங்களை வாங்குபவர்கள் விண்ணப்பிக்க கடைசி நாளான டிசம்பர் 20-ம் தேதி மாலை 6 மணிக்குள் விண்ணப்பத்தில் உள்ள விவரங்களை நிரப்பி, பனையூர் அலுவலகத்தில் தலைமை நிலைய நிர்வாகிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்.ஐ.ஆருக்கு எதிராக போராட பெண்களுக்கு மம்தா அழைப்பு

கொல்கத்தா, டிச. 12-

மேற்கு வங்கத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) குறித்து கடுமையாக விமர்சித்த திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜி, எஸ்.ஐ.ஆர். பணியின்போது உங்கள் பெயர் நீக்கப்பட்டால், சமையலறைப் பொருட்களுடன் தயாராக இருக்குமாறு பெண்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மேற்கு வங்கத்தின் கிருஷ்ணாநகரில் நடந்த ஒரு பேரணியில் பேசிய மம்தா பானர்ஜி பேசியதாவது: எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் உரிமைகளைப் பறிப்பீர்களா?. தேர்தலின் போது டெல்லியில் இருந்து காவல்துறையினரை வரவழைத்து தாய்மார்களையும், சகோதரிகளையும் அச்சுறுத்துவார்கள். தாய்மார்களே, சகோதரிகளே, உங்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டால், உங்களிடம் சமையலுக்குப் பயன்படுத்தும் கருவிகள் இருக்கின்றன அல்லவா?. உங்களிடம் சக்தி இருக்கிறது அல்லவா?. உங்கள் பெயர்கள் நீக்கப்பட்டால், அதை நீங்கள் சும்மா விடமாட்டீர்கள் அல்லவா?. அப்போது பெண்கள் முன்னணியில் நின்று போராடுவார்கள், ஆண்கள் அவர்களுக்குப் பின்னால் இருப்பார்கள்.

பெண்களா அல்லது பாஜகவா, யார் அதிக சக்தி வாய்ந்தவர்கள் என்பதைப் பார்க்க விரும்புகிறேன். நான் மதவாதத்தை நம்புவதில்லை. நான் மதச்சார்பின்மையை நம்புகிறேன். தேர்தல் வரும்போதெல்லாம், பாஜக பணத்தைப் பயன்படுத்தி, மக்களைப் பிளவுபடுத்துவதற்காக மற்ற மாநிலங்களில் இருந்து ஆட்களை அழைத்து வர முயற்சிக்கிறது. தேவைப்படும்போதெல்லாம் நாம் அனைவரும் வீட்டில் கீதையைப் பாராயணம் செய்கிறோம். அதற்கு ஏன் ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்?. கடவுள் இதயத்தில் வசிக்கிறார்கள். அல்லாவிடம் பிரார்த்தனை செய்பவர்களும் தங்கள் இதயங்களில் செய்கிறார்கள்.

ரம்ஜான் மற்றும் துர்கா பூஜையின் போது, நாம் ஒன்றாகப் பிரார்த்தனை செய்கிறோம். கீதையைப் பற்றி முழக்கமிடுபவர்களிடம், பகவான் கிருஷ்ணர் என்ன சொன்னார் என்று நான் கேட்க விரும்புகிறேன். தர்மம் என்பது தூய்மை, மனிதநேயம், அமைதி ஆகியவற்றைக் குறிக்கிறது, வன்முறை, பாகுபாடு மற்றும் பிளவைக் குறிக்காது. ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர் மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போன்ற மாபெரும் ஆளுமைகள் மக்களைப் பிளவுபடுத்தவில்லை. அப்படியானால் நீங்கள் யார்?. இவ்வாறு அவர் பேசினார்.

# மணல் கொள்ளையை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
## அறிக்கை தாக்கல் செய்ய ஐகோர்ட் உத்தரவு

சென்னை, டிச. 12-

மணல் கொள்ளையை தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என தெரிவித்துள்ள ஐகோர்ட், மணல் கொள்ளையை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது.



மணல் கொள்ளை தொடர்பான வழக்கில் கனிமவள ஆணையரை நேரில் ஆஜராக ஐகோர்ட் உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்தபோது கனிமவள ஆணையர் மோகன் நேரில் ஆஜரானார். அவரிடம், தமிழ்நாட்டில் மணல் கொள்ளையை தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த கனிமவள ஆணையர், மணல் கொள்ளையில் ஈடுபடுவோருக்கு எதிராக அபராதம் விதிக்கப்படுவதாகவும், ஆன்லைன் பதிவு முறை, ஜி.பி.எஸ். கண்காணிப்பு உள்ளிட்டவற்றின் காரணத்தால் கொள்ளை பெருமளவு தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அப்போது நீதிபதிகள், அபராதம் விதிப்பது மட்டும் போதாது, மணல் கொள்ளையில் ஈடுபடுவோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கனிமவளம் என்பது நாட்டின் சொத்து, அவற்றை கொள்ளையடிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தனர். மேலும் மணல் கொள்ளையர்களுடன் இணைந்து செயல்படும் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

மணல் கொள்ளையை தடுப்பதற்கு குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் கூட அது போதுமானதாக இல்லை என்று அதிருப்தி தெரிவித்த நீதிபதிகள், மணல் கொள்ளையை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய கனிமவள ஆணையருக்கு உத்தரவிட்டு, இந்த வழக்கின் விசாரணையை அடுத்த வாரத்திற்கு தள்ளிவைத்தனர்.

## காஞ்சீபுரம் டி.எஸ்.பி.யை கைது செய்ய உத்தரவிட்ட நீதிபதி பணியிடை நீக்கம்

காஞ்சீபுரம், டிச. 12-

காஞ்சீபுரம் டி.எஸ்.பி.யை கைது செய்ய உத்தரவிட்ட அரியலூர் மாவட்டத்தில் நீதிபதியாக பணியாற்றி வரும் செம்மல் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.



காஞ்சீபுரம் டி.எஸ்.பி. சங்கர் கணேஷை எஸ்.சி/எஸ்.டி. வழக்கில் கைது செய்ய காஞ்சீபுரம் மாவட்ட நீதிபதி செம்மல் உத்தரவிட்டிருந்தார். இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், டி.எஸ்.பி. சங்கர் கணேஷின் கைதை ரத்து செய்த சென்னை ஐகோர்ட்டு, மாவட்ட நீதிபதி செம்மல் மீது ஒழுங்கு நடவடிக்கை குழு விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தது. நீதிபதி செம்மல் தற்போது அரியலூர் மாவட்டத்தில் நீதிபதியாக பணியாற்றி வருகிறார். அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை விசாரணை முடிவடைந்த நிலையில், நீதிபதி செம்மலை பணியிடை நீக்கம் செய்து சென்னை ஐகோர்ட்டு தலைமைப் பதிவாளர் அல்லி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

### அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ்
# தமிழ்நாட்டில் 77 ரயில் நிலையங்களை மேம்படுத்த மத்திய அரசு புதிய திட்டம்

சென்னை, டிச. 12-

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 77 ரயில் நிலையங்கள் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற மக்களவையில் தமிழக எம்.பி. விஷ்ணு பிரசாத் எழுப்பிய கேள்விக்கு, மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதில் அளித்து பேசியதாவது:-

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், ரயில் நிலையங்களை மேம்படுத்த நாட்டில் இதுவரை 1,337 ரயில் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 77 ரயில் நிலையங்களை இந்த திட்டத்தின்கீழ் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதில் கடலூர் நாடாளுமன்ற தொகுதியில் விருத்தாசலம், திருப்பாதிரிப்புலியூர் ரயில் நிலையங்களும் அடங்கும். இதுவரை தமிழ்நாட்டில் 17 ரயில் நிலையங்களில் இதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளது. திருப்பாதிரிப்புலியூர், கடலூர் துறைமுக நிலையம், பெண்ணாடம் ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் இந்த திட்டத்திற்காக கடந்த 4 ஆண்டு மற்றும் நடப்பாண்டில் ரூ.5 ஆயிரத்து 449 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.4 ஆயிரத்து 439 கோடி செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



செங்கோட்டையன் எனக்கு மிக மிக வேண்டியவர். அவருக்கு என் மீது என்ன கோபம் என்று தெரியவில்லை. அவரும் இன்றைக்கு ஒரு இயக்கத்தில் போய் சேர்ந்திருக்கிறார். என்னை டெபாசிட் இழக்க செய்வதற்கு, அவர் நெல்லையில் போட்டியிட போகிறாரா? என்பது எனக்கு தெரியவில்லை.

- நயினார்



தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வியில் காலியாக உள்ள 30,000-த்துக்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது கோரிக்கைகள் மட்டுமல்ல, நம்முடைய பிள்ளைகளின் எதிர்காலத்திற்குமானதாகும். எனவே அரசு உடனடியாக தலையிட்டு ஆசிரியர்கள் சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும்.

- ராமதாஸ்



இந்தியாவின் பழமையும், பெருமையுமிக்க சென்னை பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஓய்வூதிய பணப்பலன்களை உடனடியாக விடுவிப்பதோடு, சிறப்பு நிதியை உருவாக்கி அப்பல்கலைக்கழகத்தில் நிலவும் கடுமையான நிதி நெருக்கடியை அரசு சீரமைத்திட வேண்டும்.

- டி.டி.வி.தினகரன்



இந்தியாவில் எந்த பிரதமரும் பாரதியாருக்கும், வ.உ.சி-க்கும் மரியாதை செலுத்தியதே கிடையாது. ஒருவேளை பாரதியார் இன்று இருந்திருந்தால், பிரதமர் மோடியை வாழ்த்தி பாடல் பாடி இருப்பார். ஏனென்றால் தேசியத்தையும், தெய்வீகத்தையும் முன்னிறுத்தி வருகிறார். பிரதமர் காசியில் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்.

- தமிழிசை

# காஞ்சிபுரம்-வந்தவாசி சாலை 4 வழிச்சாலையாக மாற்றும் பணிக்கான பூமி பூஜை



**காஞ்சிபுரம், டிச. 12 --**
காஞ்சிபுரம் -- வந்தவாசி நான்கு வழி சாலையாக விரிவாக்கப் பணிக்கான பூமி பூஜை நேற்று நடந்தது, ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோதி, சுந்தர் ஆகியோர் பங்கேற்றனர். காஞ்சிபுரம் -- வந்தவாசி சாலை முக்கிய சாலையாக திகழ்ந்து வருகிறது. இந்த சாலை இரு வழி சாலையாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த சாலையில் சிப்காட் தொழிற் பூங்கா அமைந்துள்ளதால், இச்சாலையில் இரவு -- பகல் என, நேரமும் போக்குவரத்து அதிகளவில் இருந்து வருகிறது. இந்த சாலையை 4 வழிச் சாலையாக மாற்ற வேண்டுமென வாகன ஓட்டிகளும், கிராம மக்களும் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து செய்யாறு வந்தவாசி நெடுஞ்சாலைத்துறை சார்பில் பகுதி பகுதியாக இந்த சாலையை நான்கு வழி சாலையாக மாற்றும் பணி கடந்த சில மாதங்களாக நடந்து வருகிறது. நேற்று பெருநகர் -- வீரம்பாக்கம் கூட்டு சாலை வரை ( 7 கிலோ மீட்டர் ) தூரத்திற்கு 4 வழி சாலை அமைக்கப் பதற்கான பூமி பூஜை நேற்று நடந்தது.

ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன் செய்ய சட்டமன்ற உறுப்பினர் ஜோதி உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் சுந்தர் ஆகியோர் தலைமை தாங்கி பூமி பூஜையை துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையின் கோட்ட பொறியாளர் சந்திரன், உதவி கோட்ட பொறியாளர் ராஜேந்திரன், உதவி பொறியாளர் கருணாகரன், மதுரையை சேர்ந்த 'நாட்ச் இந்தியா பிராஜெட் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். சாலையை தரமாகவும் குறித்த நேரத்தில் முடித்துக் கொடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன் ஒப்பந்ததாரருக்கு உத்தரவிட்டார்.



**சென்னை சைதாப்பேட்டை 169 வது வார்டில் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் ஜெயகோபால் கரோடியா மகளிர்மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை துணை மேயர் மு.மகேஷ்குமார் வழங்கினார்.**

## சென்னை தேனாம்பேட்டை மண்டலசாலையில்

# பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த கண்டெயினரை அகற்றி, ரூ.1 லட்சம் அபராதம்

**சென்னை,டிச.12**
சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை ஏற்படுத்தி மக்களுக்கு இடையூறு செய்தல், பொது இடங்களில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை சட்டவிரோதமாக கொட்டுதல், குப்பைகளை நிர்ணயிக்கப்படாத பொது இடங்களில் கொட்டுதல் உள்ளிட்ட விதிமீறல் நடவடிக்கைகளைகட்டுப்படுத்தும் வகையில் மாநகராட்சியின் சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-118ல் தனியார் மருத்துவமனை கட்டுமானப் பணிகளுக்காக அந்நிறுவனத்தின் சார்பில் சாலையில் மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்டெயினரை மாநகராட்சி அலுவலர்கள் அப்புறப்படுத்தி, மேற்கண்ட நிறுவனத்திற்கு ரூ.1 இலட்சம் அபராதம் விதித்து வசூலிக்கப்பட்டுள்ளது.மேலும், சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம் குறித்த வழிகாட்டுதல்களை பின்பற்றாமல் மேற்கண்ட இடத்தில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதையொட்டி அந்நிறுவனத்திற்கு உரிய விதிகளின்படி ரூ.5 இலட்சம் அபராதத்திற்கான நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.எனவே, பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆக்கிரமிப்புகள் மேற்கொள்வதை முற்றிலும் தவிர்த்திட வேண்டும். கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் தூய்மை மற்றும் பாதுகாப்பான கட்டுமானங்களை மேற்கொள்வதற்காக மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை முழுமையாக பின்பற்றிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்



**திருவொற்றியூர்மண்டலம்7வதுவட்டத்தில்அடங்கியபாலகிருஷ்ணாநகர்தலைவர்கணேசன் பொருளாளர் சீனிவாசன் முன்னாள் நிர்வாகிபாளையம் ஆகியோர் வார்டு அதிமுககவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் மூலம் அந்த நகரில் பொதுமக்களுக்கான தேவைகள் குறித்துமண்டல உதவிஆணையர் பத்மநாபனிடம் கோரிக்கை மனு வழங்கினார்கள்.**



சென்னை துறைமுகம் தொகுதியில் முதல்வர் படைப்பகம் அமைப்பதற்கான பூமிபூஜையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். இதில் அரசு முதன்மை செயலாளர் பிரகாஷ், வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு கலந்து கொண்டனர்.



**திருவொற்றியூர் மண்டலம்7வது வட்டம்பாலகிருஷ்ணா நகர் 1 வது மெயின் ரோட்டில் மாநகராட்சி சார்பில் சாலை யோரத்தில் கட்டப்படும் கட்டிடத்திற்கு ஆட்சேபனை தெரிவித்து பாலகிருஷ்ணா நகர்குடியிருப்போர் சங்கம் சார்பில் 7 வது வட்ட அதிமுக மாமன்றஉறுப்பினர் டாக்டர்கே.கார்த்திக்கிடம் கோரிக்கை மனுவழங்கப்பட்டது.**



**வரும் சட்டமன்ற தேர்தலையொட்டி, சென்னை சிந்தாதிரிபேட்டையில் உள்ள கிடங்கில் மின்னணு வாக்குபதிவு எந்திரங்கள் சரிபார்ப்பு பணி மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் தலைமையில் நடந்தது. இதில் இணைஆணையர் கற்பகம் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.**

# வியாசர்பாடி பகுதியில் கார் ஓட்டுநரிடம் தங்க கம்மல் மற்றும் ஜிபே மூலம் பணம் பறித்த இருவர் கைது

**சென்னை டிச 12-**
சென்னை, புழல், காவாங்கரை, நீலகண்ட நகர் 3வது தெருவில் வசித்து வரும் விஜய், என்பவர் கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 9 ந் தேதி அன்று மாலை கொருக்குப்பேட்டை மாமியார் வீட்டில் உள்ள மனைவியை பார்ப்பதற்காக காரில் சென்று கொண்டிருந்த போது, வழியில் வியார்சபாடி அசோக்பில்லர் பாலத்தில், காருக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்ற பெண் ஒருவர் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்துள்ளார். உடனே விஜய் காரிலிருந்து கீழே இறங்கி மேற்படி பெண்ணை தூக்கி விட்டு உதவி செய்துள்ளார். அப்பெண் விஜய் கார் மோதிதான், இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்ததாக எண்ணி அவரது கணவரை தொடர்பு கொண்டு தகவல் கூறியுள்ளார். சம்பவயிடத்திற்கு வந்த அப்பெண்ணின் கணவர் உட்பட 3 பேர் மேற்படி விஜயிடம் பார்த்து வரமாட்டியா என கேட்டு அவதூறாக பேசி மிரட்டி பணம் கேட்டுள்ளனர். விஜய் பணம் தரமுடியாது என் மீது எந்த தவறில்லை என்று கூறியும், மேற்படி நபர்கள் விஜயின் காதில் அணிந்திருந்த 1 ½ கிராம் எடையள்ள தங்க கம்மலை பறித்துள்ளனர். மேலும் விஜய் அவரது அப்பா மற்றும் மனைவியை தொடர்பு கொண்டு தலா ரூ.10 ஆயிரம் ரூபாய் ஜிபே மூலம் வாங்கி மேற்படி நபர்களின் வங்கி கணக்கிற்கு மொத்த ரூ.20 ஆயிரம் அனுப்பியுள்ளார். பணத்தை ஜிபே மூலம் பெற்றுக்கொண்ட மேற்படி நபர்கள் விஜயின் முகம் மற்றும் தலையில் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர். காயமடைந்த விஜய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இது குறித்து வியாசர்பாடி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.சதீஷ், 2.கார்த்திக், ஆகிய இருவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி சதீஷ் மீது 13 வழக்குகள் உள்ளதும், இவர் புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலைய சரித்திரப் பதிவேடு குற்றவாளி என்பதும், தெரியவந்தது மேற்படி வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளிகளான பவித்ரா மற்றும் அவரது கணவர் சதீஷ் ஆகிய இருவரை தனிப்படை காவல் குழுவினர் தீவிரமாக தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்

# மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.59 லட்சம் மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் உதவி உபகரணங்கள்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்

**சென்னை டிச 12-**
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.59 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் உதவி உபகரணங்களை வழங்கினார்.மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சென்னை, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் ரோடு, சென்னை பெண்கள் (மாந்தோப்பு) மேல்நிலைபள்ளியில் தென் சென்னை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் உதவி உபகரணங்கள் வழகும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில், தென் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 50 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.50,90,000/- மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,72,000/- மதிப்பிலான மின்கலனால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,44,900/- மதிப்பிலான திறன் பேசிகள் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 63,590/- மதிப்பிலான மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் மற்றும் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 28,600/- மதிப்பிலான காதுக்கு பின்னால் அணியும் காதொலி கருவிகள் என ஆக மொத்தம் 81 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 58,99,090/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்கள்.இந்நிகழ்ச்சியில், சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் சு.கீதா, மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் மோகன் தென் சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீ.குமார் உட்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# செம்பியம் பகுதியில் கட்டுமானம் நடைபெறும் இடத்தில் செல்போன் திருடியவர் கைது

**சென்னை டிச 12-**
சென்னை, பெரம்பூர், நெட்டால் கார்டன் பகுதியை சேர்ந்த மோகன்ராஜ், என்பவர் சென்னை, பெரம்பூர், கபிலர் தெருவில் நடுநிலைப்பள்ளி கட்டுமானம் நடைபெறும் இடத்தில் பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். மேற்படி இடத்தில் வடமாநில நபர்கள் தங்கி வேலை செய்து வருகின்றனர். வேலையாட்கள் நேற்று முன் தினம் அதிகாலை, மேற்படி கட்டுமானம் நடைபெறும் இடத்தில் தூங்கிக் கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர் மேற்படி இடத்தில் நுழைந்து பணியாளர் ஒருவரின் செல்போன் மற்றும் ரூ.150/- திருடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார். இதுகுறித்து மேற்படி மோகன்ராஜ் செம்பியம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

**பணம் மீட்பு**
செம்பியம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி செல்போன் திருட்டு வழக்கில் தொடர்புடைய வேளாங்கன்னி, செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மற்றும் பணம் ரூ.150 ஐ மீட்கப்பட்டது. விசாரணையில் எதிரி வேளாங்கன்னி பிளம்பர் வேலை செய்து வருவது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி வேளாங்கன்னி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திசிறையில் அடைத்தனர்.

# எம்.கே.பி. நகர் பகுதியில் பெண்ணை தாக்கி பணம் பறித்த இருவர் கைது

**சென்னை டிச 12-**
சென்னை, எம்.கே.பி நகர், 10வது தெருவில் வசித்து வரும் சுதா, என்பவர் அப்பகுதியில் டிபன் கடை நடத்தி வருவதாகவும், சுதா நேற்று முன் தினம் காலை, வீட்டினருகே எம்.கே.பி. நகர் ரஜினியம்மாள் கோயிலுக்கு சென்ற போது, அங்கு வந்த 2 பேர் மேற்படி சுதாவை வழிமறித்து பணம் கேட்டு மிரட்டியதாகவும், சுதா நீங்கள் யார் என்னிடம் பணம் கேட்பதற்கு என கேட்டபோது, இருவரும் சுதாவை அவதூறாக பேசி, கையால் தாக்கி, அதில் ஒருவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டி சுதாவிடமிருந்து ரூ.500-ஐ பறித்துக்கொண்டு கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், பாதிக்கப்பட்ட சுதா என்பவர் எம்.கே.பி நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

**கைது**
எம்.கே.பி நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.விஜி, 2.யுவராஜ், ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் ஏற்கனவே எதிரிகள் விஜி மீது 3 குற்ற வழக்குகளும், யுவராஜ் மீது 1 குற்ற வழக்கும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# சூளைமேடு பகுதியில் லாரி கண்ணாடியை உடைத்த வாலிபர் கைது

**சென்னை டிச 12-**
சென்னை, திருமழிசை, விக்னேஷ்வரா நகரில் உள்ள தண்ணீர் சப்ளை நிறுவனத்தில் தங்கி, தண்ணீர் டேங்கர் லாரி ஓட்டுநராக வேலை செய்து வருபவர் செல்வமணி, என்பவர் . இவர் கடந்த 03 ந் தேதி அன்று மதியம் கோயம்பேட்டில் இருந்து வடபழனி நோக்கி தண்ணீர் டேங்கர் லாரியை ஓட்டி சென்று கொண்டிருந்தபோது, வழியில் வள்ளுவன் ஓட்டல் சிக்னல் அருகே யமஹா இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ஒருவர், லாரியின் அருகில் வந்ததால், செல்வமணி அவரிடம் ஓரமாக செல்லுமாறு கூறியுள்ளார்.

**கொலை மிரட்டல்**
இதனால் ஆத்திரமடைந்த இருசக்கர வாகன ஓட்டுநர் துரத்தி சென்று 100 அடி சாலை, தனியார் வங்கி அருகே மேற்படி தண்ணீர் டேங்கர் லாரியை மடக்கி செல்வமணியை தகாத வார்த்தைகளால் பேசி, கொலை மிரட்டல் விடுத்து, தனது ஹெல்மெட்டால் லாரியின் முன்பக்க கண்ணாடியை உடைத்துவிட்டு லாரி ஓட்டுநர் செல்வமணியை தாக்க முற்பட்டபோது, பொதுமக்கள் வருவதை கண்டு அந்த நபர் தனது இருசக்கர வாகனத்தில் தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து செல்வமணி சூளைமேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

**விசாரணை**
சூளைமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி அருண், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய யமஹா இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி அருண் மீது ஏற்கனவே திருட்டு, அடிதடி உட்பட 5 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி அருண் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# எம்.கே.பி நகர் பகுதியில் மனைவியை தாக்கிய கணவர் கைது

**சென்னை டிச 12-**
சென்னை, வியாசர்பாடி, குமரன் நகர் பகுதியில் வசித்து வரும் பிரமிளா, என்பவர் வீட்டு வேலைகள் செய்து வருகிறார். இவரது கணவர் மகேஷ் என்பவர் குடித்து விட்டு வந்து அடிக்கடி தகராறு செய்வதாகவும், கடந்த 2024ம் ஆண்டு மகேஷ் குடித்துவிட்டு மனைவி பிரமிளாவிடம் தகராறு செய்து கத்தியால் தாக்கியதால், பிரமிளா கொடுத்த புகார் மீது வழக்குப் பதிவு செய்து மகேஷ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, பிணையில் வந்த பின்னர் இருவீட்டாரும் சமாதானம் செய்து, கணவர் மகேஷுடன் வாழ்ந்து வந்ததாகவும், இந்நிலையில் மகேஷ், நேற்று முன் தினம் காலை வீட்டிலிருந்த போது மனைவியிடம் நான் கொடுத்த பணம் ரூ.1,000ஐ கொடு என கேட்டதாகவும், பிரமிளா தர மறுத்தபோது, ஆத்திரமடைந்த மகேஷ், தகாத வார்த்தைகளால் பேசி, பிரமிளாவை கையால் தாக்கிவிட்டு கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், இரத்தக்காயமடைந்த பிரமிளா ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் தன்னை தாக்கிய தனது கணவர் மகேஷ் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் பிரமிளா எம்.கே.பி நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

**சிறையில் அடைப்பு**
எம்.கே.பி நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட மகேஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி மகேஷ் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# சேலம் மாவட்டத்தில் தேர்தலுக்காக பயன்படுத்த உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு முதல் நிலை சரிபார்த்தல் பணிகள்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது



**சேலம்,டிச.12-**
சேலம் மாவட்டத்தில் தேர்தலுக்காக பயன்படுத்த உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு *(EVMs and VVPATs)* முதல் நிலை சரிபார்த்தல் *(First Level Checking)* பணிகள் மாவட்ட தேர்தல் அலுவலர்/ கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி., தலைமையில் *(11.12.2025)* மாவட்ட ஆட்சியரகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ கலெக்டர் தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றத்தேர்தல் 2026 க்கு பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் *(EVMs and VVPATs)* 8,412 வாக்குப்பதிவு இயந்திரங்கள் *(Ballot Unit)*, 4,888 கட்டுப்பாட்டுக் கருவிகள் *(Control Unit)*, 5,336 வாக்காளர் தான் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் *(VVPATs)* ஆகிய வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சோதனை மேற்கொள்ளும் *(First Level Checking of EVMs)* பணி முதல் பெங்களூரு பெல் நிறுவன பொறியாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் நடைபெற்றது.

மேற்படி பணிகள் மாவட்ட கலெக்டர் அலுவலக மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறையில் முதல் மேற்கொள்ளப்பட உள்ளது. வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் நடைபெறுவதால் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்ப்பு பணிகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரின் பிரதிநிதிகள் தினந்தோறும் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.

இந் நி கழ் வின் போது மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் சுந்தரராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) (பொ) நடராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) அ.மயில், வட்டாட்சியர் (தேர்தல்) தாமோதரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் பாப்பாரப்பட்டி தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டப வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை விளக்கப்புகைப்படக்கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டார்.

# தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்

## கலெக்டர் ரெ.சதீஸ் தலைமையில் நடைபெற்றது



**தருமபுரி,டிச.12-**
தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக குறிஞ்சி கூட்டரங்கில் இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்-2026 பணிகள் தொடர்பான அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ரெ.சதீஸ், தலைமையில் 10.12.2025 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ரெ.சதீஸ், தெரிவித்ததாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் திருத்தப்பட்ட கால அட்டவணைப்படி 11.12.2025-ம் தேதிக்குள் வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை பதிவு செய்ய வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளில் 27.10.2025-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டிருந்த மொத்தம் 12,85,432 வாக்காளர்களுக்கும் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்து திரும்ப பெறப்பட்ட படிவங்கள் சரிபார்க்கப்பட்டு, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் பதிவு செய்யபட்டு 100% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், வாக்காளர் பட்டியலில் பதிவு செய்ய இயலாத இறப்பு, நிரந்தரமாக குடி பெ யர்ந் த வர் கள், இரட்டை பதிவு மற்றும் கண்டறிய இயலாத நபர்கள் பற்றிய தற்காலிக பட்டியல் *(Tentative list of Death, permanently shifted, Double Entry and Absent)* தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்நேர்வில், 5 சட்டமன்ற தொகுதிகளின் அனைத்து வாக்குச்சாவடிகளிலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடத்தி அக்கூட்டத்தில் அந்தந்த வாக்குச்சாவடியில் பதிவு செய்ய இயலாத நபர்களை கண்டறியப்பட்டு நபர்களின் தற்காலிக பட்டியல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு வழங்கப்பட்டது.

அப்பட்டியலில் ஏதேனும் விவரங்கள் விடுபட்டிருந்தால் அதுபற்றிய தகவலை தொடர்புடைய வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலருக்கு உடனடியாக தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு வரப்பெறும் விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், தகுதியுள்ள அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற வேண்டும், தகுதியற்ற எவரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறக்கூடாது என்பதை உறுதி செய்திடும் வகையில் அனைத்து நிலை அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர். அதன்படி, அனைத்து அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் இப்பணிக்கு தங்களின் முழுமையான ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ரெ.சதீஸ், தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பண்டரிநாதன், தேர்தல் வட்டாட்சியர் அன்பு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் அனைத்து தேசிய மற்றும் மாநில அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை
நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் ஆய்வு



**கிருஷ்ணகிரி,டிச.12-**
கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள இந்திய தேர்தல் ஆணைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கு 4-வது காலாண்டு ஆய்வு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் *(11.12.2025)* நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, எதிர் வரும் சட்டமன்ற பொதுத்தேர்தல், 2026-ஐ முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள இந்திய தேர்தல் ஆணைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள *BU – 4658, CU – 3092* மற்றும் *VVPAT – 3025* எண்ணிக்கையிலான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை *(EVM & VVPAT)* முதல் நிலை சரிபார்ப்பு பணி *(First Level Checking)* பெங்களூரு, பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 09 பொறியாளர்களை கொண்டு 11.12.2025-ம் தேதி காலை 9.00 மணி முதல் தொடங்கியுள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, முதல்நிலை சரிபார்ப்பு பணிக்காக முதல் நிலை சரிபார்ப்பு வளாகம் வெப் காஸ்டிங், மெட்டல் டிடெக்டர் பொருத்துதல், சானிடைசிங் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முதல்நிலை சரிபார்ப்பு பணி மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கு 4-வது காலாண்டு ஆய்வு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

மேலும், கர்நாடக மாநில இணை தலைமை தேர்தல் அலுவலரும், மின்னணு மற்றும் வாக்குப்பதிவு இயந்திர பொறுப்பு அலுவலருமான வி. ராகவேந்திரா முதல் நிலை சரிபார்ப்பு பணியின் முன்னேற்பாடுகள் மற்றும் தரம் குறித்து, முதல் நிலை சரிபார்ப்பு வளாகத்தில் ஆய்வு மேற்கொண்டார். முதல் நிலை சரிபார்ப்பு பணியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு முதலுதவிகள் வழங்கிடும் வகையில், மருத்துவ பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பாக அவர்களின் பிரதிநிதிகள் முதல் நிலை சரிபார்ப்புப்பணி முடியும் வரை தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை உடனிருந்து கண்காணித்து வர அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதல் நிலை சரிபார்ப்பு பணியில் கண்டறியப்படும் பழுதான வாக்குப்பதிவு இயந்திரங்களை பெங்களூரு பெல் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

மேலும், இப்பணியின் நிறைவாக அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் தவறாது மாதிரி வாக்குப்பதிவு செய்திட வேண்டும். அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் முதல் நிலை சரிபார்ப்பு பணிக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சிரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, தேர்தல் வட்டாட்சியர் சம்பத், தனி வட்டாட்சியர்கள் ஜெய்சங்கர், விஜயகுமார், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் ரமேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல்நிலை சரிபார்ப்பு பணி

## கலெக்டர் துர்காமூர்த்தி நேரில் ஆய்வு



**நாமக்கல்,டிச.12-**
தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர் தல்-2026, ஆயத்த பணியில் ஒரு பகுதியாக, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் நிலை சரிபார்ப்பு பணியினை *(First Level Checking of EVMs-VVPATs)* மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் மத்திய காப்பறையில் *(11.12.2025)* அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளின் முன்னிலையில் முதல் நிலை சரிபார்ப்பு பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் துர்காமூர்த்தி, தொடங்கி வைத்தார்.
இந்திய தேர்தல் ஆணையத்தால் எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் -2026 முன்னிட்டு நாமக்கல் மாவட்டத்தில் 2433 கட்டுப்பாட்டு கருவிகள் *(Control Unit)*, 5779 வாக்குப் பதிவு கருவிகள் *(Ballot Unit)* மற்றும் 2590 வாக்குப் பதிவை சரிபார்க்கும் கருவிகள் *(VVPATs)* ஆக மொத்தம் 10802 வாக்கு பதிவு கருவிகள் இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் *(BEL)* நிறுவனத்தின் 9 பொறியாளர்கள் தர்லோக் சிங் என்பவர் தலைமையில் முதல் நிலை சரிபார்ப்பு பணிக்கு உட்படுத்தப்படவுள்ளது.

முதல்நிலை சரிபார்ப்பு பணியின் மேற்பார்வையாளர் *(First Level Checking Supervisor)* மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) கோ.குமரன் மேற்பார்வையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கண்ட அனைத்து இயந்திரங்களின் முதல் நிலை சரிபார்த்தல் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பணிக்கு 3 வட்டாட்சியர்கள், 6 துணை வட்டாட்சியர்கள், முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் 2 நபர்களும், கிராம உதவியாளர்கள் 1 சுழற்சிக்கு 18 நபர்கள் என 5 சுழற்சிக்கு 90 நபர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணியானது தொடங் கப் பட்டு அனைத்து இயந்திரங்களும் சரிபார்த்து முடிக்கும் வரை சுமார் 22 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். சரியாக உள்ள இயந்திரங்கள் தேர்தல் பணிக்கு பயன்படுத்தப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/கலெக்டர் துர்காமூர்த்தி, தெரிவித்துள்ளார்.

வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.எ.
அதிமு.7166/2025/டி
நாள்: 29.09.2025
மகேஸ், க/பெ.தண்டபாணி,
எட்டிப்பட்டி (நடுப்பட்டி) கிராமம்,
நடுப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்
....மனுதாரர்
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........எதிர் மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது மகள் அஸ்வினி த/பெ.தண்டபாணி என்பவர் கடந்த 23.10.2008-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டி அஞ்சல், எட்டிப்பட்டி(நடுப்பட்டி) கிராமத்தில் பிறந்தார். மேற்படி எனது மகளின் பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
மகேஸ், க/பெ.தண்டபாணி,
எட்டிப்பட்டி (நடுப்பட்டி) கிராமம்,
நடுப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்
செல்: 7871832458

# ஊத்தங்கரையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயற்குழு கூட்டம்



**ஊத்தங்கரை,டிச.12-**
கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தனியார் திருமண மண்டபத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயற்குழு கூட்டம் நடைபெற்றது, கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஜெ, என்,கே,நேதாஜி தலைமை வகித்தார், துணைத் தலைவர் சக்திவேல், வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் நஜீம், கார்த்திகேயன், ஆகியோர் முன்னிலை வகித்தனர், சிறப்பு அழைப்பாளராக மேலிட பார்வையாளர்கள் அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீனிவாஸ்,மாநிலத் துணைத் தலைவர் பெனிஸ், மாநில இளைஞர் காங்கிரஸ் செயலாளர் கார்த்திக் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார், இந்தக் கூட்டத்தில் வருகிற 2029 ஆம் ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களை நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுப்பது, ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதியில் ஒவ்வொரு வருடமும் அரசு பள்ளியில் பயின்று கல்லூரி கற்க செல்வதற்கு நீண்ட தூரம் உள்ள கல்லூரிகளுக்கு செல்வதாக உள்ளது, எனவே அரசு கலைக் கல்லூரி ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் வேண்டும் தமிழக அரசுக்கு கோரிக்கை வைப்பதோடு உட்பட பல்வேறு தீர்மானங்களை கூட்டத்தில் நிறைவேற்றினார், இந்நிகழ்ச்சியின் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் ஒன்றிய குழு தலைவரும் ,மாநில செயலாளர் ஜே எஸ் ஆறுமுகம், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் குமரேசன்,தெற்கு வட்டாரத் தலைவர் தனஜெயன் ,நகர தலைவர், விஜி குமார், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி செயலாளர் சசிகுமார், தொகுதி துணைத் தலைவர் கதிரவன், காங்கிரஸ் நிர்வாகிகள் கேசவன், வினோத் குமார், பாலு உட்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

# ஏவிசி கல்லூரியில் புதிய சிமெண்ட் சாலை மாணவர்கள் பயன்பாட்டிற்காக திறப்பு



**மயிலாடுதுறை,டிச.12-**
மயிலாடுதுறை மாவட்டம் மன்னம்பந்தல் ஏவிசி கல்லூரி வளாகத்தில் புதிய சிமெண்ட் சாலை மற்றும் மாணவிகளுக்கான ஓய்விடம் விரிவாக்கம் செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.

70 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக் கல்லூரியில் மயிலாடுதுறை, தஞ்சை திருவாரூர், கடலூர், காரைக்கால், நாகப்பட்டினம், ஆகிய மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி படிப்புகளை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இவர்களின் நலனை கருத்தில் கொண்டு கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் எளிதில் பயணிக்கக் கூடிய வகையில் சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்து விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனை சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் ஏவிசி கல்வி நிறுவனங்களின் நிர்வாக அதிகாரியுமான கே. வெங்கடராமன் ரிப்பன் வெட்டி மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார். கல்லூரி முதல்வர் ஆர்.நாகராஜன், முன்னாள் தேர்வு கட்டுப்பாட்டு நெறியாளர் மேஜர் ஜி. ரவிசெல்வம், துணை முதல்வர் எம். மதிவாணன், டீன் எஸ். மயில்வாகனன் தேர்வு நெறியாளர் ஜி. கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் ஏவிசி பொறியியல் கல்லூரி இயக்குனர் எம். செந்தில் முருகன், பாலிடெக்னிக் கல்லூரி இயக்குனர் ஏ. வளவன், முதல்வர்கள் பாலசுப்பிரமணியன், தனசேகரன் மற்றும் திரளான மாணவ மாணவிகள் பேராசிரியர்கள், ஆசிரியர் இல்லாத பணியாளர்கள் கலந்து கொண்டனர்

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

அசல் சொத்து ஆவணம் காணவில்லை
க.எண்.2-93, பள்ளர் தெரு. உரக்கரை அஞ்சல், முசிறி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்-621214 என்ற முகவரியில் வசித்து வரும் ராஜேந்திரன் அவர்களின் மனைவி சுமார் 40 வயதுடைய சரளா ரா (ஆதார் எண். 5905 0092 0790) ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில், தாத்தையங்கார் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மூல பத்திர ஆவண எண்.837/1996 கடந்த 13.10.2025 தேதி ஜெராக்ஸ் எடுக்க வேண்டி இருசக்கர வாகனத்தில் ஒரு மஞ்சள் பையில் போட்டு பின்னால் உள்ள கொண்டியில் மாட்டிக் கொண்டு தலமலைப்பட்டி அருகே உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க வாகனத்தில் வைத்திருந்த மஞ்சள் பையை பார்த்த போது மஞ்சள் பையுடன் காணவில்லை. அக்கம் பக்கம் விசாரித்தும் வரும் வழியில் தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால், எனது கைப்பேசி 9791493031 எண்ணிற்கு அல்லது மேற்கண்ட எனது முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கனம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்.
I.A.No. 3/2025 in I.A.No. 4/2025 in O.S.No. 624/2025
தேவி ஹில் வியூ அபார்ட்மெண்ட் அதில் குடியிருப்போர் சார்பாக
1. பழனி
2. நர்மதா
3. விக்னேஷ் கார்த்திக்
4. ரேவதி
5. ராகுல்
...மனுதாரர்கள்/வாதிகள்
/Vs /
1. தேவி ஹில் வியூ அபார்ட்மெண்ட் உரிமையாளர்கள் சங்கம்
SRG/Salem West 129/2019, Registered Society under the Tamil Nadu Societies Registration Act.1976
அதன் தலைவர் - விக்ரம்
2. P.ஜெயபால்
...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
அறிவிப்பு
மேற்கண்ட வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள் பிரதிநித்துவ அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டு வருகின்ற **07.01.2026** -ம் தேதியன்று கனம் நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் வருகின்ற **07.01.2026** -ம் தேதி அன்று காலை 10.00 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என்று இந்த பொது அறிவிப்பின் மூலமாக அறிவிக்கப்படுகிறது.
/கோர்ட் உத்தரவுப்படி/
V.C.சீனிவாசன், B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

சேலம் மாவட்ட 2வது கூடுதல் சார்பு நீதிமன்றம் சமூகம்.
I.A.No. 3/2023 in O.S.No. 114/2018
1. குப்பாயி, க/பெ. சுப்பிரமணி
2. திலகம் க/பெ. ராமதாஸ்
க.எண்.5/86, ஏற்காடு மெயின் ரோடு, சின்னகொல்லபட்டி, சேலம் - 636008.
...மனுதாரர்கள்
/Vs /
மீரா, க/பெ. கோவிந்தன்
த/பெ. லேட். மணி
ஏற்காடு மெயின்ரோடு,
சின்னகொல்லபட்டி,
சேலம் - 636008.
...17ம் எதிர்மனுதாரர்
பொது அறிவிப்பு
மேற்படி மனுதாரர்கள் தங்கள் மீது தாக்கல் செய்துள்ள பாக பிரிவினை வழக்கின் 1 ம் பிரதிவாதி நடேசன் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகள் சேர்க்க தாக்கல் செய்துள்ள மேலே கண்ட மனுவில் தாங்கள் ஆஜர் ஆக வருகின்ற **18.12.2025** -ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி மனு குறித்து தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன் **18.12.2025** -ம் தேதி அன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ தவறாமல் ஆஜராகி ஆட்சேபனைகளை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனக்கருதி மேற்படி மனு அனுமதுக்கப்பட்டு தங்களுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.
/கோர்ட் உத்தரவுப்படி/
S.ராஜாராம்,
வழக்கறிஞர்,சேலம்.

## டி-20 கிரிக்கெட் போட்டி:
# ஹர்திக் 100 விக்கெட்களை எடுத்து புதிய மைல்கல்லை எட்ட வாய்ப்பு



**நியூ சண்டிகர், டிச. 12-**

டி-20 கிரிக்கெட் போட்டியில் 100 விக்கெட்களை எடுத்து ஹர்திக் பாண்ட்யா புதிய மைல்கல்லை எட்ட வாய்ப்புள்ளது.

**அபார வெற்றி...**

இந்தியா-தென் ஆப்பிரிக்கா அணிகள் இடையேயான 5 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரில் 2-வது ஆட்டம் நியூ சண்டிகரில் நேற்று இரவு 7 மணிக்கு நடைபெற்றது. கட்டாக்கில் நடைபெற்ற முதல் போட்டியில் சூர்ய குமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி 74 ரன்னில் சுருட்டி 101 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்திலும் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெறும் ஆர்வத்தில் உள்ளது.

**122 போட்டிகளில்...**

மார்க்ரம் தலைமையிலான தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான 2-வது டி-20 போட்டியில் இந்திய அணியின் ஆல்ரவுண்டரான ஹர்திக் பாண்ட்யா 100 விக்கெட்டை வீழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது முடியவில்லை. முன்னதாக அவர் 121 போட்டிகள் விளையாடி 99 விக்கெட் எடுத்திருந்தார். நேற்றைய ஆட்டத்தில் ஒரு விக்கெட் கைப்பற்றி இருந்தால்அவர் 100-வது விக்கெட்டை எடுத்து புதிய மைல்கல்லை எட்டியிருப்பார்.

**3-வது இந்திய வீரர்...**

100-வது விக்கெட்டை எடுக்கும் பட்சத்தில் அவர் 3-வது இந்திய வீரர் என்ற பெருமையை ஹர்திக் பாண்ட்யா பெறுவார். கடந்த போட்டியின் போது பும்ரா 100 விக்கெட்டை தொட்டார். அவர் 81 போட்டியில் 101 விக்கெட்டை எடுத்து 2-வது இடத்தில் உள்ளார். அர்ஷ் தீவ் சிங் 107 விக்கெட்டுகளை (69 போட்டி) கைப்பற்றி முதல் இடத்தில் உள்ளார். முதல் 20 ஓவர் போட்டியில் ஹர்திக் பாண்ட்யா பேட்டிங்கில் அதிரடியை வெளிப்படுத்தி அரை சதத்தை பதிவு செய்தார். அதோடு ஒரு விக்கெட்டும் கைப்பற்றிதன் மூலம் அவர் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகமாகியுள்ளது.

## காஸ்வே - மிட்ச் ஹே அரைசதம்:
# நியூசி., 278 ரன்களுக்கு டிக்ளேர்

**கேப்டவுன், டிச. 12-**

மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுகள் இழந்து 278 ரன்களுக்கு டிக்ளேர் செய்தது.

**முதல் டெஸ்ட் ட்ரா..**

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, 5 டி20, 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றியைத் தட்டிப்பறித்து சமனில் முடித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது.

**205 ரன்னில் அவுட்...**

நியூசிலாந்தின் வெலிங்டன் நகரில் நேற்று(புதன்கிழமை) தொடங்கிய இந்த டெஸ்ட்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 205 ரன்களில் ஆல்-அவுட் ஆனது. மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ஷாய் ஹோப் 47 ரன்களும், கேம்ப்பெல் 6 பவுண்டரிகளுடன் 44 ரன்களும் எடுத்தனர். அபாரமாகப் பந்து வீசிய டிக்னர் 4 விக்கெட்டுகளும் மிட்செல் ரே 3 விக்கெட்டுகளும் ஜேக்கப் டஃபி, கிளென் ஃபிலிப்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தி அசத்தினர். முடிவில், மேற்கிந்தியத் தீவுகள் அணி 75 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 205 ரன்கள் சேர்த்தது.

**மிட்செல் ஹே...**

பின்னர், தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணியில் கேப்டன் லாதம் 11 ரன்களில் வெளியேற அடுத்துவந்த வில்லியம்சனுடன் கைகோர்த்த தொடக்க ஆட்டக்காரர் கான்வே நிதானமாக ஆடி ரன் சேர்த்தார். கான்வே 60 ரன்களும், வில்லியம்சன் 7 பவுண்டரிகளுடன் 37 ரன்களும் சேர்த்து பெவிலியன் திரும்பினர். அடுத்துவந்த அதிரடி ஆட்டக்காரர் ரவீந்திரா 5 ரன்களில் ஏமாற்றமளிக்க, டேரில் மிட்செல் 25 ரன்களும், விக்கெட் கீப்பர் மிட்செல் ஹே 61 ரன்களும் எடுத்து அசத்தினார். பின் வரிசை ஆட்டக்காரர்களும் ஓரளவுக்கு ஒத்துழைப்பு கொடுத்தனர்.

**278 ரன்களில் டிக்ளேர்...**

க்ளென் பிலிப்ஸ் 18 ரன்களும், ஜேக்கப் டஃப்பி 11 ரன்களும், மைக்கேல் ரே 13 ரன்களும் எடுத்தனர். ஸாகரி ஃபோல்க்ஸ் 23 ரன்கள் எடுத்து களத்தில் இருந்தார். வேகப்பந்து வீச்சாளர் டிக்னெர் முதல் இன்னிங்ஸின் போது தோள்பட்டை காயத்தால் போட்டியில் இருந்து விலகியதால் அவர் பேட்டிங் செய்ய வரவில்லை. இதனால், 74.4 ஓவர்களில் 278 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில், ஆண்டர்சன் பிலிப் 3 விக்கெட்டுகளும், கெமர் ரோச் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

**களத்தில் 32 ரன்களுடன்...**

பின்னர், 73 ரன்கள் முன்னிலையுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னின்ஸை தொடங்கியது. இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், 10 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பு மேற்கிந்தியத் தீவுகள் அணி 32 ரன்கள் எடுத்துள்ளது. பிரண்டன் கிங் 15 ரன்களும், காவெம் ஹாட்ஜ் 3 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

# ஐ.பி.எல். 2026 மினி ஏலத்தில் 11 தமிழக வீரர்களுக்கு இடம்

**சென்னை, டிச. 12-**

ஐ.பி.எல். 2026 மினி ஏலத்தில் கலந்து கொள்ளும் பட்டியலில் வருண் சக்ரவர்த்தி, சாய் கிஷோர், சாய் சுதர்சன், டி.நடராஜன், வாஷிங்டன் சுந்தர் உள்ளிட்ட 11 தமிழக வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**177 வீரர்கள்...**

19-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவில் அடுத்த ஆண்டு (2026) மார்ச் முதல் மே மாதம் வரை நடக்கிறது. இதையொட்டி மொத்தம் 177 வீரர்கள் அணிகளில் தக்கவைக்கப்பட்டு, 71 பேர் விடுவிக்கப்பட்டனர். தற்போது 10 அணிகளுக்கும் சேர்த்து 31 வெளிநாட்டவர் உள்பட மொத்தம் 77 வீரர்கள் தேவைப்படுகிறார்கள். இதற்கான ஐ.பி.எல். மினி ஏலம் அபுதாபியில் வருகிற 16-ந் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு நடக்கிறது.

**1,355 வீரர்கள்...**

ஏலத்துக்கு முதலில் 1,355 வீரர்கள் தங்களது பெயரை பதிவு செய்திருந்தனர். பிறகு அணி நிர்வாகங்களின் வேண்டுகோளுக்கு இணங்க தென் ஆப்பிரிக்காவின் குயின்டான் டி காக், ஜார்ஜ் லின்டே, இலங்கையின் துனித் வெல்லாலகே உள்பட 35 வீரர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டனர். 1,390 பேர் அடங்கிய வீரர்களின் பட்டியல் 10 அணிகளுக்கும் அனுப்பப்பட்டு தங்களுக்கு விருப்பமான வீரர்கள் குறித்து கடந்த 5-ம் தேதிக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்தது.

**350 வீரர்கள் இடம்...**

10 அணிகளிடம் இருந்து கிடைத்த பட்டியலை ஆய்வு செய்த ஐ.பி.எல். நிர்வாகம் இறுதி ஏலப்பட்டியலை வெளியிட்டது. இதன்படி இறுதி ஏலப்பட்டியலில் மொத்தம் 350 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் 240 பேர் இந்தியர்கள், 110 பேர் வெளிநாட்டினர். இவர்களில் 224 இந்தியர் உள்பட 238 பேர் சர்வதேச போட்டியில் ஆடாதவர்கள். 112 வீரர்கள் சர்வதேச அனுபவம் பெற்றவர்கள்.

**11 தமிழக வீரர்கள்...**

இந்த ஏலப்பட்டியலில் 11 தமிழக வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அதன்படி, டிஎன்.பி.எல். மற்றும் சையத் முஷ்டாக் அலி கோப்பை தொடரில் அசத்திய துஷர் ரஹேஜா, அஜிதேஷ், ஜதாவேத் சுப்ரமணியன், சந்தீப் வாரியர், சஞ்சய் யாதவ், இசக்கிமுத்து, முகமது அலி, ஆர்.எஸ்.அம்பரிஷ், ஆர்.ராஜ்குமார், சன்னி சந்து மற்றும் சோனு யாதவ் ஆகிய 11 தமிழக வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். இவர்களில் வேகப்பந்து வீச்சாளரான சந்தீப் வாரியரின் அடிப்படை விலை ரூ.75 லட்சமாகும். மற்றவர்களின் விலை ரூ.30 லட்சமாகும். தமிழகத்தை சேர்ந்த வருண் சக்ரவர்த்தி, சாய் கிஷோர், சாய் சுதர்சன், டி.நடராஜன், வாஷிங்டன் சுந்தர், ஷாருக் கான், எம்.சித்தார்த் ஆகியோர் அணிகளால் தக்க வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸி. அணியில் இடம்பிடித்த
# 2 இந்திய வம்சாவளியினர்

**கேன்பரா, டிச. 12-**

ஆஸி. யு-19 உலகக் கோப்பையில் இந்திய வம்சாவளியினர் இரண்டு பேர் இடம்பிடித்து அசத்தியுள்ளார்கள்.

**ஆர்யன் -ஜான் ஜேம்ஸ்...**

யு-19 உலகக் கோப்பை போட்டிகள் வரும் ஜன.15 முதல் பிப்.6ஆம் தேதி வரை நமிபியா, ஜிம்பாப்வேயில் நடைபெற இருக்கின்றன. யு-19 உலகக் கோப்பைக்கான 15 பேர்கொண்ட ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆர்யன் சர்மா, ஜான் ஜேம்ஸ் ஆகிய இருவரும் இடம்பிடித்துள்ளார்கள். ஆர்யன் இடதுகை பேட்டர், இடதுகை சுழல் பந்து வீச்சாளராகவும் ஜேம்ஸ் வலதுகை மிதமான பந்துவீச்சு ஆல்-ரவுண்டர் திறமைக்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.இருவருமே யூத் டெஸ்ட்டில் இந்திய அணிக்கு எதிராக கடந்த செப்டம்பரில் விளையாடினார்கள்.

**இலங்கையை சேர்ந்த...**

இந்திய வம்சாவளி மட்டுமல்லாமல் இலங்கையைச் சேர்ந்த இருவரும் (நடேடன் கூரே, நிதேஷ் சாமுவேல்) சீனாவைச் சேர்ந்த அலெக்ஸ் லீ யங் என்ற வீரரும் இடம்பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. நட்பு யு-19 சாம்பியனாக இருக்கும் ஆஸ்திரேலிய அணியை ஆலிவர் பீக் கேப்டனாக வழிநடத்துகிறார்

# வெண்கலம் வென்றது இந்தியா




**சென்னை, டிச. 12-**

14-வது ஜூனியர் உலகக் கோப்பை ஆக்கி தொடரில் இந்திய அணி 4-2 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்தி வெண்கல பதக்கத்தை தட்டி சென்றது.

14-வது ஜூனியர் உலகக் கோப்பை ஆக்கி தொடர் (21 வயதுக்கு உட்பட்டோர்) சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. கடந்த 28-ந் தேதி தொடங்கிய இந்த போட்டி இறுதி கட்டத்தை எட்டி விட்டது. இதில் வெண்கல பதக்கத்துக்கான ஆட்டத்தில் இந்தியா - அர்ஜென்டினா அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் அர்ஜென்டினா 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. 2-வது பாதியில் எழுச்சி பெற்ற இந்திய அணி அடுத்தடுத்து கோல் அடித்து அசத்தியது. முழு நேர ஆட்ட முடிவில் இந்திய அணி 4-2 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்தி வெண்கல பதக்கத்தை தட்டி சென்றது.

## ஹாக்கி: ஜெர்மனி சாம்பியன்

14-வது ஜூனியர் உலகக் கோப்பை ஆக்கி தொடர் (21 வயதுக்கு உட்பட்டோர்) சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்று வந்தது. கடந்த 28-ந் தேதி தொடங்கிய இந்த போட்டியில் இறுதி ஆட்டம் நடைபெற்றது. 'நம்பர் ஒன்' அணியான ஜெர்மனி, 4-ம் நிலை அணியான ஸ்பெயினை எதிர்கொண்டது. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜெர்மனி அணி, ஸ்பெயின் அணியை 3-2 என்ற கணக்கில் பெனால்டி முறையில் வீழ்த்தியது. இதன் மூலம் ஜெர்மனி அணி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

## மிட்செல் ஸ்டார்க் 3-வது இடம்



பந்து வீச்சாளர்களுக்கான ஐசிசி தரவரிசையில் மிட்செல் ஸ்டார்க் 3 இடங்கள் முன்னேறி முதல்முறையாக தன் வாழ்நாளில் உச்சமான மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். முதல் இரண்டு ஆஷஸ் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி வென்று 2-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது. மிட்செல் ஸ்டார்க் முதல் போட்டியில் 10, இரண்டாவது போட்டியில் 8 விக்கெட்டுகள் எடுத்து இரண்டிலும் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

இந்த அபாரமான பந்துவீச்சினால் ஐசிசி தரவரிசையில் மூன்று இடங்கள் முன்னேறி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். மீதமுள்ள 3 போட்டிகளிலும் இதேமாதிரி விளையாடினால் முதலிடம் பிடிக்கவும் வாய்ப்புள்ளது குறிப்பிடத்தக்கது.ஐசிசி டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசை வருமாறு., 1. ஜஸ்ப்ரீத் பும்ரா - 879 புள்ளிகள், 2. மாட் ஹென்றி - 853 புள்ளிகள், 3. மிட்செல் ஸ்டார்க் - 852 புள்ளிகள், 4. நோமன் அலி - 843 புள்ளிகள், 5. மார்கோ யான்சென் - 825 புள்ளிகள்.

## மினி ஏலத்தில் ஷ்ரேயாஸ் பங்கேற்பு



19-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவில் அடுத்த ஆண்டு (2026) மார்ச் முதல் மே மாதம் வரை நடக்கிறது. இதையொட்டி மொத்தம் 177 வீரர்கள் அணிகளில் தக்கவைக்கப்பட்டு, 71 பேர் விடுவிக்கப்பட்டனர். தற்போது 10 அணிகளுக்கும் சேர்த்து 31 வெளிநாட்டவர் உள்பட மொத்தம் 77 வீரர்கள் தேவைப்படுகிறார்கள். இதற்கான ஐ.பி.எல். மினி ஏலம் அபுதாபியில் வருகிற 16-ந் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு நடக்கிறது. 10 அணிகளிடம் இருந்து கிடைத்த பட்டியலை ஆய்வு செய்த ஐ.பி.எல். நிர்வாகம் இறுதி ஏலப்பட்டியலை வெளியிட்டது.

அதன்படி இறுதி ஏலப்பட்டியலில் மொத்தம் 350 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் 240 பேர் இந்தியர்கள், 110 பேர் வெளிநாட்டினர். இவர்களில் 224 இந்தியர் உள்பட 238 பேர் சர்வதேச போட்டியில் ஆடாதவர்கள். 112 வீரர்கள் சர்வதேச அனுபவம் பெற்றவர்கள். இந்நிலையில் ஐபிஎல் மினி ஏலத்தில் பஞ்சாப் அணிக்காக, அணியின் கேப்டன் ஷ்ரேயாஸ் பங்கேற்கிறார். ஆஷஸ் தொடர் வர்ணனையில் பயிற்சியாளர் ரிக்கி பாண்டிங் உள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. துபாயில் வரும் டிச. 16-ம் தேதி நடைபெறும் ஏலத்தில் ஒரு அணி சார்பில் அதிகபட்சம் 8 பேர் பங்கேற்கலாம்.

## ஜெர்சி குறித்து மந்தனா பெருமிதம்

கிரிக்கெட்டை விட நான் வேறு எதையும் அதிகமாக நேசிப்பதாக எனக்கு தோன்றவில்லை என இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- கிரிக்கெட்டை விட நான் வேறு எதையும் அதிகமாக நேசிப்பதாக எனக்கு தோன்றவில்லை. இந்திய ஜெர்சியை அணிவதுதான் எங்களை இயக்கும் உந்துசக்தி.

எல்லாப் பிரச்சனைகளையும் ஒதுக்கி வைத்துவிடும். அந்த ஒரு எண்ணமே வாழ்க்கையில் கவனம் செலுத்த உதவுகிறது. ஒரு குழந்தையாக இருந்தபோதிலிருந்தே, பேட்டிங் மீதான அந்த வெறி எப்போதும் இருந்தது. அதை யாரும் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் என் மனதில், நான் எப்போதும் ஒரு உலக சாம்பியன் என்று அழைக்கப்பட வேண்டும் என்றே விரும்பினேன். என ஸ்மிருதி மந்தனா கூறினார்.

## ரோகித் குறித்து ஜெய்ஸ்வால் நெகிழ்ச்சி

தென் ஆப்பிரிக்கா எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் பேட்டிங் செய்ய தொடங்கிய போது பதட்டமாக இருந்ததாகவும் ரோகித் அடிக்கடி என்னிடம் பேசி விளக்கி கொண்டே இருந்ததாக ஜெய்ஸ்வால் கூறினார். இது குறித்து அவர் கூறியதாவது:- கடந்த இரண்டு போட்டிகளிலும் ரன்கள் எடுக்காததால் கடைசி ஒருநாள் போட்டியில் நான் பேட்டிங் செய்ய தொடங்கியபோது, பதட்டமாக இருந்தேன். அந்த இன்னிங்சில், நான் எப்படி விளையாடலாம், என்ன செய்ய வேண்டும் என்று ரோகித் என்னிடம் விளக்கிக் கொண்டே இருந்தார்.

நிறைய டாட் பந்துகளை ஆடியதால் அழுத்தத்தில் இருந்தேன், மேலும் ஒரு நல்ல ஸ்ட்ரைக் ரேட்டை பராமரிக்க வேண்டும் என்று யோசிக்க வேண்டியிருந்தது. அப்போது ரோகித் என்னிடம், 'நீ நிதானமாக விளையாடு, நான் ரிஸ்க் எடுக்கிறேன்' என்று சொன்னார். நான் நிலைத்து நின்று விளையாட வேண்டும் என்பதற்காக, அவரே பெரும்பாலான ரிஸ்க்குகளை எடுத்துக்கொண்டார். என ஜெய்ஸ்வால் கூறினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் மு.வீரபாண்டியன், முன்னாள் மாநிலச்செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச்செயலாளர் நா.பெரியசாமி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவினையொட்டி சந்தித்து பேசினர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்திய 14-வது ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற ஜெர்மனி அணிக்கு வெற்றிக்கோப்பையை வழங்கினார்.

# ரூ.5 ஆயிரம் கோடி மதிப்பில் பிணையப் பத்திரங்கள் ஏலம்
## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

**சென்னை, டிச. 12-**

ரூ.5000 கோடி மதிப்பிலான பிணைய பத்திரங்கள் ஏலம் விடுவதா தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.5000 கோடி மதிப்பில் ரூ.1000 கோடி மதிப்புள்ள 4 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம், ரூ.1000 கோடி மதிப்புள்ள 7 ஆண்டுக்காலப் பிணையப்பத்திரம், ரூ.1000 கோடி மதிப்புள்ள 10 ஆண்டுக்காலப் பிணையப்பத்திரம், ரூ.1000 கோடி மதிப்புள்ள 11 ஆண்டுக்காலப் பிணையப்பத்திரம் மற்றும் ரூ.1000 கோடி மதிப்புள்ள 30 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் டிசம்பர் 16, 2025 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் மின்னணு படிவத்தில் டிசம்பர் 16, 2025 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் மீதான வழக்கு ரத்து - ஐகோர்ட்

**சென்னை, டிச. 12-**

அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் மீதான வழக்கு ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவிட்டது.

மத்திய அரசு கொண்டு வந்த வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் சார்பில் 2020-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் விருதுநகர் மாவட்டத்தில் போராட்டம் நடத்தப்பட்டது. அந்த சமயத்தில் கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகளை மீறி இந்த போராட்டம் நடத்தப்பட்டதாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், இந்த குற்றச்சாட்டுகளை பொறுத்தவரை 2 ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கக் கூடிய பிரிவுகளில் மட்டும்தான் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சூழலில், 5 ஆண்டுகள் வரை இன்னும் இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரித்த நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, 2020-ல் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் உள்ளிட்டோர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார். இதே போல் பால்வளத்துறையின்அப்போதைய அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜியை கண்டித்து கொரோனா காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்டதாக விருதுநகர் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. சீனிவாசனுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கையும் ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சபரிமலை மண்டல பூஜை தரிசனத்திற்கு ஆன்லைனில் முன்பதிவு தொடங்கியது

**திருவனந்தபுரம், டிச. 12-**

சபரிமலையில் மண்டல பூஜை தரிசனத்திற்கு நேற்று (டிச.11) மாலை 5 மணி முதல் ஆன்லைனில் முன்பதிவு தொடங்கியது.

நடப்பு மண்டல, மகரவிளக்கு சீசனை முன்னிட்டு சபரிமலை அய்யப்பன் கோவில் நடை கடந்த மாதம் 16-ம் தேதி திறக்கப்பட்டு பூஜைகள் நடந்து வருகிறது. கோவிலில் நடப்பு ஆண்டின் மண்டல பூஜை வருகிற 27-ம் தேதி (சனிக்கிழமை) நடக்கிறது.

இந்நிலையில் வரும் 26 மற்றும் 27-ம் தேதிகளில் பக்தர்கள் தரிசனத்துக்கு ஆன்லைன் முன்பதிவு இன்று மாலை 5 மணிக்கு தொடங்குகிறது. இதன்படி sabarimalaonline.org என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்யலாம் என்றும், டிச. 26ம் தேதி 30 ஆயிரம் பேருக்கும், 27-ம் தேதி 35 ஆயிரம் பேருக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், ஸ்பாட் புக்கிங்கில் தலா 5 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மண்டல பூஜையின்போது, திருவிதாங்கூர் மன்னர் சித்திரை திருநாள் மகாராஜா வழங்கிய 450 சவரன் எடையுள்ள தங்க அங்கி அய்யப்பனுக்கு அணிவித்து மண்டல பூஜை நடத்தப்படுவது வழக்கம். இந்த தங்க அங்கி பத்தனம்திட்டா மாவட்டம் ஆரன்முளா பார்த்தசாரதி கோவிலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சபரிமலையில் 27-ம் தேதி மண்டல பூஜை நடைபெறுவதையொட்டி தங்க அங்கி 23-ம் தேதி காலை 7 மணிக்கு ஆரன்முளா பார்த்த சாரதி கோவிலில் இருந்து அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு வாகனத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஊர்வலமாக சபரிமலை நோக்கி புறப்படுகிறது.

அன்று இரவு ஓமல்லூரிலும், 24-ம் தேதி இரவு கோண்ணியிலும், 25-ம் தேதி பெரிநாட்டிலும் ஊர்வலம் தங்குகிறது. பின்னர் ஊர்வலம் 26-ம் தேதி மதியம் பம்பை கணபதி கோவிலில் வந்து சேரும். அங்கிருந்து தங்க அங்கியை மேளதாளம் முழங்க பக்தர்கள் தலைச்சுமையாக சன்னிதானத்திற்கு கொண்டு செல்வார்கள். அன்று மாலை 5.30 மணிக்கு சன்னிதானத்திற்கு வந்து சேரும் தங்க அங்கிக்கு திருவிதாங்கூர் தேவஸ்தானம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும். பின்னர் அதனை 18-ம் படிக்கு கீழ் தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு பெற்றுக் கொள்வார்.

தொடர்ந்து 18-ம் படி வழியாக கொண்டு செல்லப்பட்டு மாலை 6.30 மணிக்கு அய்யப்பனுக்கு அணிவிக்கப்படும். இதையடுத்து அலங்கார தீபாராதனை நடைபெறும். பின்னர் நடைபெறும் வழக்கமான பூஜைகளுடன் இரவு 11 மணிக்கு கோவில் நடை அடைக்கப்படும். தங்க அங்கி சன்னிதானத்திற்கு கொண்டு வரப்படுவதையொட்டி 26-ம் தேதி பிற்பகலில் 18-ம் படி ஏற பக்தர்களுக்கு அனுமதி இல்லை. தங்க அங்கி அணிவித்து நடைபெறும் தீபாராதனைக்கு பிறகு பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மறுநாள் 27-ம் தேதி அதிகாலை 3 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு வழக்கமான பூஜை நடைபெறும். தொடர்ந்து 5 மணிக்கு நடைபெறும் களபாபிஷேகத்திற்கு பிறகு தங்க அங்கி அலங்காரத்துடன் ஜொலிக்கும் அய்யப்பனுக்கு மண்டல சிறப்பு பூஜை நடைபெறும். அன்று பகல் 1 மணிக்கு நடை அடைக்கப்பட்ட பின்னர் மீண்டும் மாலை 3 மணிக்கு நடை திறக்கப்பட்டு வழக்கமான பூஜைகளுக்கு பின்னர் இரவு 11 மணிக்கு கோவில் நடை சாத்தப்படும்.

ஒட்டன்சத்திரம் ஒன்றியம் புளியமரத்து கோட்டையில்

# என்வாக்குச்சாவடி, வெற்றிவாக்கு சாவடி தெருமுனை பிரச்சார கூட்டம் அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடந்தது



**ஒட்டன்சத்திரம்,டிச.12-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட புளியமரத்துக் கோட்டை, ஐ.வாடிப்பட்டி பகுதிகளில் என் வாக்குச்சாவடி, வெற்றிவாக்கு சாவடி என்ற தலைப்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடைப்பெற்றது. இதில் தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் தொகுதி தேர்தல் பார்வையாளர் பரணி மணி, ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், எஸ்.ஆர்.கே. பாலு, நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி, ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ், ஒன்றிய துணைச்செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், ராமகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி சண்முகம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தங்கராஜ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மணிபாரதி, உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பரமக்குடியில் ரூ.50 ஆயிரம் லஞ்சம் வாங்கிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கைது



**பரமக்குடி,டிச.12-**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவை சேர்ந்த புகார்தாரர் எஸ். அண்டக்குடி ஊராட்சியில் உள்ள இடத்தை இராமநாதபுரம் நகர ஊரமைப்புத்துறையில் மனையிட அனுமதி பெற்றுள்ளார். அதனைத்தொடர்ந்து அரசுக்கு உள்ளாட்சி மனை வரன்முறைப்படுத்தல் கட்டணமாக ரூ.3 லட்சத்து 47 ஆயிரத்து 800 ஐ கடந்த மாதம் செலுத்தியுள்ளார்.

மேற்படி இடத்திற்கு உள்ளாட்சி அனுமதி பெற கடந்த வாரம் பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பிடிஓ அன்புக்கண்ணனை சந்தித்து விவரம் கேட்ட போது அவர் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவனை (49) பாருங்க என கூறியுள்ளார். மேற்படி இளங்கோவனை சந்தித்து விவரம் கேட்ட போது ஒரு வாரம் கழித்து வாங்க என விவரம் கூறியுள்ளார். பின்பு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இளங்கோவனை பார்த்து விவரம் கேட்ட போது உங்க பைல் தயார் செய்ய எனக்கும், அலுவலகத்தில் உள்ளவர்களுக்கும் சேர்த்து ரூ. 1இலட்சத்தை கொடுத்தால் தான் உங்களுடைய பிளாட்டுகளை மனையிட வரன்முறைப்படுத்த அனுமதி பிடிஓவிடம் பெற்று தரமுடியும் என கரராக கூறியுள்ளார். பின்பு மீண்டும் நேற்று காலை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவனை பார்த்து விவரம் கேட்ட போது, அவர் ஏற்கனவே தான் கேட்ட பணம் ரூ.1 இலட்சத்தை கொடுத்துவிட்டு உங்க ஆர்டரை வாங்கி கொள்ளுங்கள் என கூறியுள்ளார்.

அதற்கு புகார்தாரர் அவ்வளவு பணம் என்னால் முடியாது சொன்னதற்கு, அவர் இன்று ரூ.50 ஆயிரம் கொடுங்க மீதி பணம் ரூ. 50 ஆயிரத்தை வரும் வெள்ளிக்கிழமை கொடுங்க என கரராக கூறியுள்ளார்.

எனவே லஞ்சம் கொடுக்க விரும்பாத மனுதாரர் இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலிஸில்புகார் செய்தார்.

லஞ்ச ஒழிப்பு துறை போலிஸார் அவர்களின் அறிவுத்தலின் பேரில் ரசாயனம் தடவிய பணம் ரூ.50 ஆயிரத்தை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவனிடம் கொடுக்கும் போது லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரை கையும் களவுமாக பிடித்தனர்.

மேற்படி நபர் மீது தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# பஞ்சாலை மகளிர் தொழிலாளர்களுக்கு மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம்



**வத்தலகுண்டு, டிச.12-**

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை, நத்தம் கிராம பகுதிகளில் உள்ள ஆயத்தஆடைமற்றும்பஞ்சாலைதொழிலாளர்களுக்குஆக்ட் இந்தியா பவுண்டேஷன் மூலம் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு தடை நிவர்த்தி சட்டம் 2013 ( POSH Act 2013) , மற்றும் மாதவிடாய் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடைபெற்றது. ஆத்தூர் ஒன்றியத்தில் செங்கட்டாம்பட்டி ,ஆத்தூர் , சித்தையன் கோட்டை, மேட்டுப்பட்டி ஆகிய கிராம பகுதிகளில் உள்ள பெண்களுக்கு ஆக்ட் இந்தியா பவுண்டேஷன் மூலமாக கம்ப்யூட்டர்திறன் வளர்ப்பு பயிற்சி இலவசமாக நடைபெற்றது. பயிற்சியில் ஆக்ட் இந்தியா பவுண்டேஷன் இயக்குனர் அசோக் ராஜா, ஆக்ட் இந்தியா பவுண்டேஷன் திட்ட மேலாளர் உஷா, செல்வி. விஜயஸ்ரீ மற்றும் ஆயத்த ஆடை தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.



**திண்டுக்கல், நிலக்கோட்டை வட்டம், அணைப்பட்டி ஆஞ்சநேயர் திருக்கோவிலில் அமைந்துள்ள வைகை ஆற்றுப்பகுதியில் நடைபெற்று வரும் தூய்மைப்பணிகளை கலெக்டர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நல அலுவலர் சுகுமாறன், நிலக்கோட்டை வட்டாட்சியர் ஜெயபிரகாஷ் உள்ளார்.**

# பரமக்குடி கைத்தறி உதவி இயக்குனர் திடீர் மாற்றம்

**பரமக்குடி, டிச.12-**

பரமக்குடி கைத்தறி உதவி இயக்குனர் சேரனை மதுரைக்கு பணியிட மாற்றம் செய்து சென்னை கைத்தறி இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் கைத்தறி உதவி இயக்குனராக சேரன் பணியாற்றி வருகிறார். இவர் மீது பரமக்குடி,எமனேஸ்வரம் கூட்டுறவு சங்கங்களின் பெடரேஷன் சார்பில் பணியிட மாற்றம் செய்யக்கோரி கோரிக்கை எழந்தது. இதன் காரணமாக சங்கங்களைப் அடைத்து வேலை நிறுத்த போராட்டங்கள் செய்தனர். மேலும் பல்வேறு போராட்டங்களை அறிவித்திருந்தனர். சங்கங்களின் சார்பில் கைத்தறி இயக்குனரிடம் கோரிக்கை மனுவினை நேரில் சென்றுஅளித்தனர்.இந்நிலையில் பரமக்குடி கைத்தறி உதவி இயக்குனரை மதுரை சரகத்திற்கு மாற்றம் செய்து சென்னை கைத்தறி இயக்குனர் மகேஸ்வரி உத்தரவிட்டார். மதுரை கைத்தறி உதவி இயக்குனராக பணியாற்றி வரும் மாதவன் பரமக்குடிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.



**அருப்புக்கோட்டை அருகே வேலாயுதபுரம் விளக்கில் திருச்செந்தூரில் இருந்து தர்மபுரி சென்ற ஐயப்ப பக்தர் பேருந்து முன்னாள் ஆட்களை ஏற்றிச்சென்ற குட்டி யானை வேன் மீது மோதியதில் வேன் அருகில் உள்ள ஓடையில் கவிழ்ந்தது. இதில் காயமடைந்த பத்துக்கு மேற்பட்டோர் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுகுறித்து பந்தல்குடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.**

# அருப்புக்கோட்டையில் வீட்டின் பாத்ரூம் மீது பெட்ரோல் குண்டு வீசியவர் கைது



**அருப்புக்கோட்டை,டிச.12-**

அருப்புக்கோட்டை நகராட்சி ராமசாமிபுரம் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் முனிப்பாண்டி(49). டிரைவர் வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில் முனிப்பாண்டி தனது மனைவியுடன் தனது உறவினர் வீட்டிற்கு சென்ற நேரத்தில் முனிப்பாண்டி வீட்டில் அவரது மகன் பார்த்தசாரதி மற்றும் பார்த்தசாரதி மனைவி இருந்துள்ளனர். இந்நிலையில் இரவு நேரத்தில் மர்ம நபர்கள் முனிப்பாண்டி வீட்டின் பாத்ரூம் மீது பெட்ரோல் குண்டு வீசியுள்ளனர்.

இதில் ஜன்னல் கண்ணாடி உடைந்தது. இதை குறித்து முனிப்பாண்டி அருப்புக்கோட்டை டவுன் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தார். போலீசார் விரைந்து வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை நடத்தினர். இந்த சம்பவத்தில் ஆறு பேர் ஈடுபட்டதாகவும் அனைவரையும் கைது செய்ய வலியுறுத்தி ராமசாமிபுரம் பகுதி பொதுமக்கள் தூத்துக்குடி சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அனைவரின் மீது வழக்கு பதிவு செய்து அவர்களை கைது செய்யும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என இரண்டு மணி நேரமாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அருப்புக்கோட்டை ஏ.எஸ்பி மதிவாணன் தலைமையிலான போலீசார் ஆறு பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் விரைவில் கைது செய்வோம் என கூறி அவர்களிடம் உறுதி அளித்ததை தொடர்ந்து மறியலில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இந்நிலையில் ஏ.எஸ்பி மதிவாணன் உத்தரவின் பேரில் டவுன் இன்ஸ்பெக்டர் பாலமுருகன் தலைமையில் போலீசார் தீவிரமாக விசாரணை செய்து குற்றவாளிகளை தேடி வந்தனர். விசாரணையில் அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தனர். ஆய்வில் அதே ஊரைச் சேர்ந்த 16 வயது சிறுவன் முன் விரோதம் காரணமாக முனிய பாண்டி வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசியதாக விசாரணை தெரிய வந்தது. மேலும் அந்த சிறுவன் செல்போனில் youtube இல் வெடிகுண்டு வீசுவது எப்படி என பார்த்து பெட்ரோல் குண்டு வீசியதாக போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.அதனை தொடர்ந்து அவரை கைது செய்து அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் டவுன் போலீசார் ஆஜர் செய்தனர்.



**மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நடைபெற்ற மாவட்ட காவல்துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்து நடத்தும் ஒன்றிணைவேம் விழிப்புணர்வு நிகழச்சியை கலெக்டர் பிரவீன்குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உடன் எஸ்.பி. அர்விந்த், வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன் உள்ளார்.**



**தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் நான்காவது புத்தக திருவிழா வருகின்ற 21-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை தேனி நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற உள்ளதை முன்னிட்டு தேனி 4-வது புத்தக திருவிழா இலச்சினையை கலெக்டர் ரஞ்ஜீத்சிங் நேற்று வெளியிட்டார்.**

# வத்தலக்குண்டு பேரூராட்சி அலுவலகம் முன்பாக நிலவேம்பு கசாயம் வழங்கல்: செயல் அலுவலர் தொடங்கி வைத்தார்



**வத்தலகுண்டு, டிச.12-**

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் சரவணன், திண்டுக்கல் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா ஆகியோர் உத்தரவின் பேரில். தற்போது உள்ள சூழலில் பொதுமக்கள் முழு சுகாதாரத்துடன் வாழ்க்கை நடத்தும் விதமாக,வத்தலகுண்டு பேரூராட்சியின் முன்பாக நிலவேம்பு கசாயம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. பேரூராட்சி செயல் அலுவலர். சரவணகுமார் துவக்கி வைத்தார். தலைமை எழுத்தர் முருகேசன் சுகாதார ஆய்வாளர் கருணாகரன் மற்றும் பேரூராட்சி பணியாளர்களுடன் இப்பணியினை சிறப்பாக செய்து வருகிறார்கள்.

# முதுகுளத்தூர் அரசு கல்லூரியில் தொழில் முனைவோர் பயிற்சி முகாம்




**முதுகுளத்தூர், டிச.12-**

முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை மற்றும் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம் சார்பாக கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இரண்டு நாள் இலவச பயிற்சி வகுப்பு நேற்று தொடங்கியது.

இந்நிகழ்ச்சியினை கல்லூரி முதல்வர் மணிமாறன் தலைமையேற்று நடத்தினார்.

அழகப்பா திறன் மேம்பாட்டு மைய இயக்குனர் தர்மன் மற்றும் சிவகங்கை மாவட்ட தலைமை தொழில் முனைவோர் ஒருங்கிணைப்பாளர் அருமை ரூபன் கலந்து கொண்டனர்.

கணிதத் துறை பேராசிரியர் வே.மகேந்திரன் தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் வரவேற்றார். மேலும் ஆங்கிலத்துறை தலைவர் ஆ.பாலமுருகன் மற்றும் வணிகவியல் துறை தலைவர் ஜெ.பானுப்பிரியா வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக சரவணன் கிருஷ்ணன் தொழில் முனைவோர் பயிற்றுனர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பயிற்சியினை வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியினை கணிதத்துறை மூன்றாம் ஆண்டு மாணவி செல்வி மகாலட்சுமி தொகுத்து வழங்கினார் பயிற்சியில் கலந்து கொண்டோருக்கு பங்கேற்பு சான்றிதழ் கல்லூரி முதல்வரால் வழங்கப்பட்டன

# வத்திபட்டி பகுதிகளில் இன்று மின்தடை

**நத்தம், டிச.12-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே எல்.வலையபட்டியில் உள்ள உப மின் நிலையத்தில் இன்று 12-ம் தேதி வெள்ளிக்கிழமை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதையொட்டி இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை ரெட்டியபட்டி, வத்திபட்டி, காசம்பட்டி, புதுக்கோட்டை, லிங்கவாடி, பரளி, வேம்பரளி, தேத்தாம்பட்டி, கவரயபட்டி, பொடுகம்பட்டி மற்றும் பெருமாள்பட்டி ஆகிய ஊர்களில் மின்சாரம் இருக்காது என திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் புண்ணியராகவன் தகவல் தெரிவித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் புதிய தலைவர் சண்முகம், துணைத்தலைவர் நக்கீரன் கோபால், செயலாளர் வயிரவன், பொருளாளர் வெங்கடாசலம் உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து பெற்று, 2026 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சென்னை புத்தகக் காட்சியை தொடங்கி வைத்திட வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர். உடன் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி உள்ளார்.




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்திய 14-வது ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற ஜெர்மனி அணிக்கு வெற்றிக் கோப்பையை வழங்கினார். இந்நிகழ்வில் பீகார் மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் ஸ்ரேயாஸி சிங், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம், இந்திய ஹாக்கி சங்கத் தலைவர் திலீப் திர்கி, மற்றும் ஹாக்கி சங்க நிர்வாகிகள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமியை நேற்று சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

# எடப்பாடி பழனிசாமியுடன் நயினார் நாகேந்திரன் சந்திப்பு

**சென்னை, டிச. 12-**

எடப்பாடி பழனிசாமியுடன் நயினார் நாகேந்திரன் நேற்று சந்தித்து பேசினார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சட்டசபை தேர்தல் நடத்தப்பட கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக, கட்சிகள் கூட்டணி அமைப்பது உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு, அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. ஒரு கூட்டணியாக செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தமிழக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியை சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அவருடைய இல்லத்தில் தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று சந்தித்து பேசினார். இதுபற்றி நயினார் நாகேந்திரன் அவருடைய எக்ஸ் சமூக தளத்தில் வெளியிட்ட பதிவில், தமிழக எதிர்க்கட்சி தலைவர் மற்றும் அ.இ.அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து உரையாடினேன்.

இந்த நிகழ்வில் மாநில துணை தலைவர்கள் சக்கரவர்த்தி மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோரும் உடன் இருந்தனர் என பதிவிட்டு உள்ளார். இதில், கூட்டணியை வலுப்படுத்துவது தொடர்பாகவும், கூட்டணியில் புதிய கட்சிகளை சேர்ப்பது பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது என தகவல் தெரிவிக்கின்றது.

### சுப்ரியா சாகுவுக்கு ஐ.நா. விருது:

# தமிழ்நாடு பெருமை கொள்வதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, டிச. 12-**

சுப்ரியா சாகுவின் பணிகள் தொடர ஐ.நா. விருது பெரும் ஊக்கமாக அமையும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக ஐ.ஏ.எஸ். அதிகாரி சுப்ரியா சாகுவுக்கு ஐ.நா.வின் உயரிய சுற்றுச்சூழல் விருதான 'சாம்பியன்ஸ் ஆப் எர்த்' (பூமியின் வெற்றியாளர்கள்) விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சுப்ரியா சாகு தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளராக தற்போது பணியாற்றி வருகிறார்.

இந்த விருது சுற்றுசூழலுக்காக சிறந்த பங்களிப்பை வழங்க கூடிய தனி நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு கொடுக்கப்படும் மிக உயரிய விருதாகும். இந்த நிலையில் ஐ.நா.வின் விருதை பெற்றுள்ள சுப்ரியா சாகுவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது., காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் உலக அளவில் தமிழ்நாடு சிறப்பான இடத்தைப் பெற ஆர்வத்துடன் உழைத்தமைக்காக ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் அமைப்பின் 'சாம்பியன்ஸ் ஆப் எர்த்' விருதினை வென்றுள்ள தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் & வனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகுவுக்கு எனது பாராட்டுகள்.

ஈரநிலப் பாதுகாப்பு, அலையாத்திக் காடுகள் பரப்பை அதிகரித்து வருதல், அருகி வரும் அரிய உயிரினங்களைக் காத்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் உள்ளிட்ட நமது அரசின் சீரிய முயற்சிகள் மென்மேலும் சிறக்கும் வகையில் அவரது பணிகள் தொடர இவ்விருது பெரும் ஊக்கமாக அமையும் என நம்புகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தமிழ் கவிஞர் பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி

**சென்னை, டிச. 12-**

தமிழ்ச் சமூகத்துக்குப் புது நெறி காட்டிய பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

கவிஞர், எழுத்தாளர், விடுதலை போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி என பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மகாகவி பாரதியாரின் 144-வது பிறந்தநாள் நேற்று (டிசம்பர் 11-ம் தேதி) கொண்டாடப்பட்டது.

இந்த நிலையில் பாரதியாரின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்; தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம் எனப் பாடிப் பெண்களின் உயர்வை வலியுறுத்திய மகாகவி பாரதியாரின் பிறந்தநாள் இன்று! நமது திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்ததுமே பாட்டுக்கொரு புலவன் பாரதி மறைவெய்திய நூற்றாண்டினையொட்டி அவரது புகழ் பரப்பும் 14 சிறப்பு அறிவிப்புகளை வெளியிட்டுச் செயல்படுத்தி வருகிறோம்.

பெண்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் நமது அரசின் திட்டத்துக்குப் பாரதியின் கவிதையில் இருந்தே புதுமைப்பெண் எனப் பெயரிட்டோம். பாரதியாரின் நினைவுநாளினை "மகாகவி நாள்" எனக் கடைப்பிடிக்கவும் அறிவிப்பு செய்தோம். சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் புதுமையை நோக்கி விரைந்து தமிழ்ச் சமூகத்துக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தமிழ்நாடு அரசின் சார்பில், பாரதியாரின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நாளை உண்ணாவிரதம்:

# நிபந்தனைகளுடன் ஐகோர்ட் கிளை அனுமதி

**மதுரை, டிச. 12-**

திருப்பரங்குன்றம் விவகாரத்தை தொடர்ந்து வருகிற 13-ம் தேதி நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்திற்கு மதுரை கிளை நிபந்தனைகளுடன் அனுமதி அளித்துள்ளது.

மதுரை திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என இந்து அமைப்புகள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றன.

திருப்பரங்குன்றம் மலையில் உச்சிப்பிள்ளையார் கோவில் வளாகத்தில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு வருகிறது. தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று கோரி தொடர்ந்த வழக்கில், இந்த ஆண்டு முதல் கார்த்திகை தீப திருநாளில் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற மதுரை ஐகோர்ட்டு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். ஆனால் அன்றைய தினம் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றவில்லை. வழக்கம்போல் உச்சிப்பிள்ளையார் கோவில் வளாகத்தில்தான், கோவில் சார்பில் தீபம் ஏற்றப்பட்டது. இந்தநிலையில், இதுதொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஐகோர்ட் மதுரைக்கிளையில் விசாரணையில் உள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக, சுப்ரீம்கோர்ட்டில் தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது. இத்தகைய சூழலில், திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வலியுறுத்தி, அந்த ஊர் மக்கள் சார்பில், டிசம்பர் 13ம் தேதி உண்ணாவிரத போராட்டம் நடத்த அனுமதி கோரப்பட்டது. இதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் உண்ணாவிரத போராட்டம் நடத்த அனுமதி கோரி, மதுரை ஐகோர்ட்டில் திருப்பரங்குன்றம் ஊர் மக்கள் சார்பாக இரா.பிரபு தரப்பில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்று நீதிபதி ஸ்ரீமதி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, 50 பேர் மட்டுமே போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். காவல்துறையால் அனுமதிக்கப்பட்ட சன்னதி தெருவில் காலை 9 முதல் 5 மணி வரை உண்ணாவிரத இருக்க வேண்டும், அரசியல் பேசக் கூடாது என நிபந்தனை விதித்து, அனுமதி அளித்து நீதிபதி உத்தரவிட்டார்.



தமிழ்நாடு அரசின் சார்பில், பாரதியாரின் 144-வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வால்டாக்ஸ் சாலையில் அமைந்துள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் "முதல்வர் படைப்பகம்"அமைப்பதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு, பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துறைசார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிகுட்பட்ட, வெங்கடாபுரம் திட்ட பகுதியில் ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் குடியிருப்புகள் புனரமைப்பு பணிகளுக்கான ஆணைகளை ஒப்பந்ததாரருக்கு வழங்கினார். இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.